بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 8

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

இதழ் 28 & 29

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - துல்ஹஜ் 24-முஹர்ரம் 01★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - வஃபா 13-20 ★13-20 ஜுலை 2023

## அல்லாஹ்வின் கட்டளை

ذٰلِكَ مِمَّاۤ اَوۡحٰۤى اِلَيۡكَ رَبُّكَ مِنَ الۡحِكۡمَةِ ؕ وَلَا تَجۡعَلۡ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ فَتُلۡقٰى فِىۡ جَهَنَّمَ مَلُوۡمًا مَّدۡحُوۡرًا

**பொருள் :** நீர் அல்லாஹ்வுடன் வேறெதனையும் வணக்கத்திற்குரியதாக்கிக் கொள்ளாதீர். அவ்வாறாக்கினால் நீர் பழிக்கப்பட்டவராகவும், கைவிடப்பட்டவராகவும் நரகத்தில் எறியப்படுவீர். (பனீ இஸ்ராயீல் : 40)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்ஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எவர் தபத்துல் இலல்லாஹ் என்ற நிலையில் இறைவனுடன் அவர் பேசுகின்ற இடத்தையும் இறைவன் அவருடன் உரையாடுகின்ற இடத்தையும் அடைந்து விடுகின்றாரோ அவர் நபியாக இருக்கின்றார். உண்மைக்கான எல்லா வழிகளிலும் நேசம் கொள்ளக் கூடியவரும் உண்மையை மட்டுமே விரும்புபவருமே ஸித்தீக் ஆக இருக்கின்றார்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۙ (அல்ஃபாத்திஹா:6). என்பதில் اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ என்பதற்குரிய வழி வேண்டப்பட்டுள்ளது. மேலும் இதில் நபி, ஸித்தீக், ஷஹீத், ஸாலிஹ் என்ற நான்கு வகையான கூட்டத்தினரைக் குறித்து கூறப்பட்டுள்ளது என்று நான் பலமுறை எடுத்துரைத்துள்ளேன். ஒரு நம்பிக்கையாளர் இந்த துஆவை வேண்டும்போது அவர் இந்தக் கூட்டத்தினரின் ஒழுக்கம், பழக்கவழக்கம் மற்றும் ஞானங்களை வேண்டுகின்றார். அவர் இந்த நான்கு கூட்டத்தினரின் ஒழுக்கத்தை பெறவில்லையென்றால் பின்னர் இந்த துஆ அவருக்கு பயனளிக்காததாக இருக்கின்றது. மேலும், (அந்நிலையில்) அவர் உயிரற்ற வார்த்தைகளை கூறக்கூடிய விலங்காக இருக்கின்றார். இறைவனிடமிருந்து மேன்மையான ஞானங்களையும், மகத்துவமிக்க படித்தரங்களையும் பெற்றுக் கொண்ட கூட்டத்தினரே (மேற்குறிப்பிட்ட) இந்த நான்கு வகையான மக்கள் ஆவர். எவர் தபத்துல் இலல்லாஹ் என்ற நிலையில் இறைவனுடன் அவர் பேசுகின்ற இடத்தையும் இறைவன் அவருடன் உரையாடுகின்ற இடத்தையும் அடைந்து விடுகின்றாரோ அவர் நபியாக இருக்கின்றார். உண்மையின் மீது நேசம் கொள்ளக்கூடியவரே ஸித்தீக் ஆவார். மாபெரும் உண்மை لَاۤ اِلٰهَ اِلَّا اللّٰهُ ஆகும். மேலும், அடுத்த உண்மை مُحَمَّدٌ رَّسُوۡلُ اللّٰهِ ஆகும். அவர்கள் உண்மைக்கான எல்லா வழிகளிலும் நேசம் கொள்கின்றனர். மேலும் அவர்கள் உண்மையை மட்டுமே விரும்புகின்றனர். ஷஹீது என்று அழைக்கப்படுபவர்கள் மூன்றாவது வகை மக்கள் ஆவர். அவர்கள் ஒருவகையில் இறைவனை காண்கின்றனர். (இறை வழியில்) கொலை செய்யப்படுபவர் மட்டுமே ஷஹீது அல்ல. அல்லது ஒரு போர் அல்லது தொற்று நோயில் மரணித்து விடுபவர் மட்டுமே ஷஹீது அல்ல. மாறாக, இறை வழியில் உயிரை அர்ப்பணிப்பதற்கும் தயங்காத வலிமையான ஈமான் கொண்டவர் ஷஹீது ஆவார். எவர்களிடத்தில் எல்லா வகையான குழப்பங்களும் அகன்று விடுகின்றனவோ அவர்கள் ஸாலிஹீன் ஆவர். உதாரணமாக, மனிதன் ஆரோக்கியமாக ஆகிவிடுகின்றபோது அவனது நாவின் சுவையும் சீரானதாக இருக்கின்றது. முழு ஆரோக்கியமான நிலையில் உடல் ஆரோக்கியமானவர் என்றழைக்கப்படுகின்றது. அந்நிலையில் எவ்வகையான கேடும் அவனுள் இருப்பதில்லை. இதேபோன்று (ஸாலிஹீன்) எனும் நல்லடியார்களுக்குள் எவ்வகையான ஆன்மிக நோயும் இருப்பதில்லை. மேலும் குழப்பத்திற்கான எந்தத் தன்மையும் இருப்பதில்லை. அதன் சிறப்பு

**இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்**

**எனக்கு இந்த சிலைகளின் மூலமாக இறைவன் கிடைத்து விட்டான் என்றும் அவை எனது துஆக்களை கேட்கின்றன மேலும் ஒப்புக் கொள்கின்றன என்றும் வாதம் செய்யக் கூடிய எந்த ஒரு நபரும் இன்று வரை பிறக்கவில்லை.**

قُلۡ لَّوۡ كَانَ مَعَهٗۤ اٰلِهَةٌ كَمَا يَقُوۡلُوۡنَ اِذًا لَّابۡتَغَوۡا اِلٰى ذِى الۡعَرۡشِ سَبِيۡلًا (17:43)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்: இணை வைத்தல் எனும் கருத்து மீண்டும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதில் ஒரு புதிய சான்று வழங்கப்பட்டுள்ளது. முந்தைய விஷயம் தேவையின்றி மீண்டும் கூறப்படவில்லை. அல்லாஹ் கூறுகின்றான்: இணை வைத்தல் சரியான விஷயமாக இருந்திருந்தால் பின்னர் இணை வைப்பாளர்கள் இறைவனை அடைந்திருக்க மாட்டார்களா?

اِذًا لَّابۡتَغَوۡا اِلٰى ذِى الۡعَرۡشِ سَبِيۡلًا

என்பதன் பொருள் இதுவே ஆகும். அதாவது, இணை வைத்தல் சரியான விஷயமாக இருந்திருந்தால் பின்னர் இணை வைப்பாளர் அர்ஷின் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பார்களே! ஏனெனில், நவுதுபில்லாஹ் அவனது மகள்கள் அல்லது மகன்களுடன் தொடர்பை உருவாக்கிக் கொண்டு விட்ட பிறகு அவர்களுக்கு நெருக்கத்தின் வழிகள் திறந்திருக்க வேண்டும்.

மற்றோர் இடத்தில் திருக்குர்ஆனில் இணை வைப்பாளர்களின் சொந்த வாதம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது, அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே அவர்களும் அவற்றை வணங்கி வந்தனர். உதாரணமாக, அல்லாஹ் சூரா ஸுமரில்.

نَعۡبُدُهُمۡ اِلَّا لِيُقَرِّبُوۡنَاۤ اِلَى اللّٰهِ زُلۡفٰى ؕ (39:4)

என்று கூறுகின்றான்: பொருள்: இந்த சிலைகள் எங்களுக்கு இறைவனின் நெருக்கத்தை பெற்றுத் தர வேண்டும் என்பதற்காகவே நாங்கள் அவற்றை

**இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்**

## நபிமொழி

**அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதன் முக்கியத்துவம்**

(2298) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் கடன் பாக்கி வைத்திருக்கும் நபருடைய ஜனாஸா கொண்டு வரப்பட்டால் பின்னர், இவர் கடனை அடைப்பதற்கு செல்வம் எதனையும் விட்டுச் சென்றுள்ளாரா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் கேட்பார்கள். அதற்கு ஆம்! என்று மக்கள் கூறினால் பின்னர் அன்னார் (ஸல்) அவருடைய ஜனாஸா தொழுகையைத் தொழ வைப்பார்கள். இல்லையென்றால், நீங்கள் உங்களுடைய தோழருக்கு ஜனாஸா தொழுகையை தொழ வையுங்கள் என்று முஸ்லிம்களிடம் கூறிவிடுவார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வெற்றிகளை வழங்கியபோது அன்னார் (ஸல்) கூறினார்கள்: நான் முஸ்லிம்களுக்கு அவர்களின் உறவினர்களை விடவும் மிகவும் நெருக்கமானவன் ஆவேன். எனவே நம்பிக்கையாளர்களில் மரணமடைகின்ற நபர் கடன் வைத்துவிட்டுச் சென்றால், பின்னர் அதனை செலுத்துவது எனது பொறுப்பாகும். மேலும், எவர் ஒருவர் செல்வத்தை விட்டுவிட்டுச் செல்வாரோ அது அவரது வாரிசுகளுக்கானதாகும்.

ஹஸ்ரத் ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த ஹதீஸிற்கு விளக்கமாக எழுதியுள்ளார்கள்: இந்த இடத்தில் கடனாளிக்கு ஜனாஸா தொழுகை நடத்தாதது தடுக்கப்பட்டதா? அல்லது தண்டனையா? என்ற இக்கேள்வியையும் மார்க்கச் சட்ட வல்லுநர்கள் எழுப்பியுள்ளனர். மக்களுக்கு அடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவலை இருந்து வர வேண்டும் அல்லது அதனை சாதாரணமானதாக கருதக் கூடாது என்பதற்காக ஆகும். (உம்தத்துல் காரீ, பாகம் 12, பக்கம் 126)

ஆனால், கடனாளிக்கு ஜனாஸா தொழுகை நடத்துவது ஹராமாக இருந்திருந்தால் பின்னர் நீங்கள் தொழுகை நடத்திக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம் கூறியிருக்க மாட்டார்கள். இதிலிருந்து இந்த செயல் தடுக்கப்பட்டது என்ற நிலையில் அல்ல. மாறாக, தண்டனையின் வடிவில் ஆகும் என்பது தெரிய வருகின்றது. (ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் கஃபாலா, பதிப்பு காதியான் 2008 ஆம் ஆண்டு)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாற்றின் ஒளியில் பத்ர்ப் போரின் பின்னணியைக் குறித்த பேருரை**

**பத்ர்ப் போருக்கு முன்னர் நடைபெற்ற சில சிறு சிறு போர்களைப் பற்றிய குறிப்புகள்**

**உபைதா பின் ஹாரிஸ் (ரலி) அவர்களின் படைப் பிரிவில் இஸ்லாமிய வரலாற்றின் முதல் அம்பை ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் எய்தார்கள். அதில் அன்னார் ஆகுமான பெருமிதம் கொண்டிருந்தார்கள்**

**ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ஸஃபர் மாதத்தில் நடைபெற்ற வத்தான் யுத்தம் முதலாவது யுத்தமாக இருந்தது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 60,70 முஹாஜிர்களுடன் சுயமே கலந்து கொண்டிருந்தார்கள்**

**அல்லாஹ் புனிதமான மாதமான ரஜப் மாதத்தில் அப்துல்லாஹ் ஜஹ்ஷ் (ரலி) அவர்களுக்காக சூரா அல் பக்ராவின் 218-வது வசனத்தை முஸ்லிம்களின் ஆறுதலுக்காக இறக்கினான்**

**பத்ர்ப் போர் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிற்றனை ஆத்திகா பின் அப்தில் முத்தலிப் அவர்கள் கண்ட ஒரு விநோதமான கனவு பிற்காலத்தில் உண்மையானதாக நிரூபணமானது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 09 ஜூன் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **09ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹிஜ்ரத்திற்குப் பிறகு இருந்த ஆரம்ப நிலையில் பத்ர் யுத்தத்திற்கான காரணிகள், மக்கத்து நிராகரிப்பாளர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அமல்கள் மற்றும் அவர்களுடைய திட்டங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்த நடவடிக்கை ஆகியவற்றைப் பற்றி சிறிது கூறப்பட்டிருந்தது.

இப்பொழுது பத்ர் யுத்தத்திற்கு முன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்த படைப் பிரிவுகள் மற்றும் அன்னார் தாமே தலைமை தாங்கிச் சென்ற படைப் பிரிவுகள் பற்றி சுருக்கமாக முதலில் எடுத்துக் கூறுவேன். பிறகு, மக்கத்து நிராகரிப்பாளர்கள் போருக்காக மேற்கொண்ட ஆயத்தங்களின் நிலைமைகளையும் சிறிது எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் படைப் பிரிவு: இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்த முதல் படைப் பிரிவாகும். இதை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 1ம் ஆண்டு ரமலான் மாதத்தில் அனுப்பி வைத்தார்கள். இதை ஸைஃபுல் பஹ்ர் படைப் பிரிவு என்றும் கூறுவார்கள். இதன் கொடி வெள்ளை நிறத்தில் இருந்தது. அபூ மர்ஸத் ஃகன்வீ (ரலி) அவர்கள் இந்தக் கொடியை ஏந்தியிருந்தார்கள்.

இந்தப் படைப் பிரிவை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 1ம் ஆண்டு ரமாலான் மாதத்தில் அனுப்பி வைத்தார்கள். தம் தந்தையின் சகோதரரான ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் (ரலி) அவர்களை இதற்குத் தலைவராக நியமித்தார்கள். அன்னாருடன் 20 முஹாஜிர்கள் சவாரி செய்திருந்தார்கள். இந்த மக்கள் அய்ஸ் என்ற இடத்தின் பக்கத்தில் செங்கடலின் கரை வரை சென்றார்கள்.

இவர்கள் அபூஜஹ்லின் தலைமையில் சிரியாவிலிருந்து வந்து கொண்டிருந்த குறைஷியர்களின் ஒரு வணிகக் குழுவை எதிர்கொண்டார்கள். இய்ஸ் என்பது ராபிஃக் எனும் இடத்தின் வடக்கில் ஏறத்தாழ 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஓர் இடம் ஆகும். அது ஸனிய்யத்துல் மரா என்ற இடத்திற்குப் பக்கத்தில் உள்ளது.

ராபிஃக் மதீனா முனவ்வராவில் இருந்து ஏறக்குறைய 200 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு ஜுனாபத்துல் இய்ஸ் என்ற ஒரு நீரூற்று உள்ளது. அதைச் சுற்றி கருவேல மரம் போன்ற மரங்களும் பெருமளவில் இருந்தன. இதனால் இது இய்ஸ் என்று அழைக்கப்படுகின்றது. இங்கு பனூ ஸுலைம் கோத்திரத்து மக்கள் வசித்து வந்தனர். சிரியாவுக்குப் போகும் குறைஷியர்களின் வணிகக் குழுக்கள் இங்கிருந்து கடந்து சென்றன.

எவ்வாறு இருப்பினும், இரண்டு பிரிவினரும் அணி வகுத்து நின்றார்கள். எதிரெதிரே வந்து விட்டார்கள். போர் நடந்திருக்கும்; ஆனால், கோத்திரத்தின் ஒரு தலைவர் விலக்கி வைத்து விட்டார். இரண்டு பிரிவினரும் திரும்பிச் சென்று விட்டார்கள்.

(அட்லஸ் ஸீரத்துன்னபீ (ஸல்) - பக்கம் 193 - 194, தாருஸ் ஸலாம் ரியாழ் பதிப்பு, ஹிஜ்ரீ 1424)

பிறகு, உபைதா பின் ஹாரிஸ் அவர்களின் படைப் பிரிவு: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 1ம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்களை 60 முஹாஜிர்களின் படைத் தளபதியாக நியமித்து ராபிஃக் எனும் இடத்துக்கு அருகில் உள்ள ஸனிய்யத்துல் மராவுக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு அபூ ஸுஃப்யானையும் அவருடைய இருநூறு சவாரி வீரர்களையும் எதிர் கொள்ள நேரிட்டது.

இருதரப்பிலிருந்தும் சில அம்புகள் எய்யப்பட்டன. ஆனால், முறையாக போர் நடைபெறவில்லை. ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் அந்த நாளில் எல்லாருக்கும் முதலாக அம்பு எய்தினார்கள். அதற்கு முன் ஒருபோதும் முஸ்லிம்களுக்கும் இணை வைப்பாளர்களுக்கும் மத்தியில் அம்பு எய்தல் கூட நடைபெற்று இருக்கவில்லை. ஆக, இது இஸ்லாமிய வரலாற்றின் முதல் அம்பு ஆகும். இது குறித்து ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் ஆகுமானப் பெருமிதம் கொண்டிருந்தார்கள்.

பிறகு, இரு சாராரும் தத்தமது பகுதிகளுக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள். ஸனிய்யத்துல் மரா என்பது ராபிஃக் நகரத்தின் வடகிழக்கு திசையில் 55 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மேலும், இது மதீனா முனவ்வராவிலிருந்து 200 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

(அட்லஸ் ஸீரத்துன்னபீ (ஸல்) - பக்கம் 196, தாருஸ் ஸலாம் ரியாழ் பதிப்பு, ஹிஜ்ரீ 1424)

பிறகு, ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வகாஸ்(ரலி) அவர்களின் படைப் பிரிவு: ஹிஜ்ரீ 1ம் ஆண்டு மற்றும் சிலரது கூற்றுப்படி ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களை 20 பேருக்குத் தலைவராக நியமித்து அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்கு கர்ரார் என்ற இடத்தைத் தாண்டி செல்லக் கூடாது என்று கட்டளையிட்டிருந்தார்கள்.

அவர்கள் நடந்தே சென்று விட்டார்கள். பகலில் ஒளிந்து கொண்டும், இரவில் பயணம் செய்தும் சென்றார்கள். எதுவரை என்றால் அவர்கள் கர்ரார் என்ற இடத்தை அடைந்து விட்டார்கள். குறைஷியர்களின் வணிகக் குழுவைத் தடுத்து நிறுத்துவதே அவர்களது நோக்கமாக இருந்தது. ஆனால், இந்தப் படைப் பிரிவு கர்ரார் சென்றடைந்தபோது வணிகக் குழு முந்தைய நாளில் அந்த இடத்தைக் கடந்து சென்று விட்டது தெரிய வந்தது. எனவே அவர்கள் எவ்வித மோதலுமின்றித் திரும்பி வந்து விட்டார்கள். கர்ரார் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதற்குப் பொருள் சத்தமாகப் பாய்ந்து ஓடக் கூடிய தண்ணீர் என்பதாகும்.

மேலும், கர்ரார் ஹிஜ்ஜாஸ் என்ற பகுதியில் ஜுஹ்ஃபாவுக்கு அருகில் இருக்கக் கூடிய ஓர் இடத்தின் பெயராகும்.

(அட்லஸ் ஸீரத்துன்னபீ (ஸல்) - பக்கம் 199, தாருஸ் ஸலாம் ரியாழ் பதிப்பு, ஹிஜ்ரீ 1424)

பிறகு, வத்தான் அல்லது அப்வாவுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தலைமையில் சென்ற படைப் பிரிவு ஆகும். இது ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ஸஃபர் மாதத்தில் சென்றது. ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ஸஃபர் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 60.70 முஹாஜிர்களுடன் அப்வா அல்லது வத்தானை நோக்கிச் சென்றார்கள். வரலாற்றாசிரியரான இப்னு ஸஃது அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே கலந்து கொண்ட முதல் படைப் பிரிவு இதுவே ஆகும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது பின் உபாதா (ரலி) அவர்களை மதீனாவில் தம் பிரதிநிதியாக நியமித்தார்கள். அன்னார் அப்வா என்ற இடம் வரை சென்றடைந்தார்கள். குறைஷியர்களின் வணிகக் குழுக்களைத் தடுத்து நிறுத்துவது அன்னாரது நோக்கமாக இருந்தது. ஆனால், அன்னார் அங்கு சென்றடைவதற்கு முன்னரே அது கடந்து சென்று விட்டிருந்தது. அங்கு அன்னார் பனூ ஸம்ரா கோத்திரத்தின் தலைவர் மக் ஷீ பின் அம்ர் வ ஸமரீயுடன் சமரச உடன்படிக்கை செய்தார்கள். இவ்வாறு உடன்படிக்கை செய்யப்பட்டது.

அன்னார் பனூ ஸம்ரா மீது தாக்குதல் தொடுக்க மாட்டார்கள். பனூ ஸம்ராவினரும் அன்னாருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது. எந்த நடவடிக்கையில் பங்கெடுக்கவும் கூடாது. அன்னாருடைய எந்த எதிரிக்கும் உதவி புரியவும் கூடாது.

இந்தப் பயணத்தில் அன்னார் 15 நாட்கள் வரை மதீனாவில் இருந்து வெளியே இருந்தார்கள். வத்தான் என்ற இடத்தைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இது மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடைப்பட்ட ஓர் இடமாகும். அப்வாவில் இருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அங்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்குரிய தாயார் நல்லடக்கம் செய்யப்பட்டிருந்தார்கள். இது ஜுஹ்ஃபாவில் இருந்து ஏறத்தாழ 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

(அட்லஸ் ஸீரத்துன்னபீ (ஸல்) - பக்கம் 202, தாருஸ் ஸலாம் ரியாழ் பதிப்பு, ஹிஜ்ரீ 1424)

இந்த இடங்களின் பெயர்களையும், இந்த விஷயங்களையும் நான் எதற்காக கூறுகின்றேன் என்றால் அங்கு பயணம் செய்யக்கூடிய சில அஹ்மதிகள் இருக்கின்றார்கள். உம்ரா செய்பவர்கள் உம்ராவும் செய்கின்றார்கள். அவர்கள் வரலாறு அறிந்திருப்பதன் காரணமாக அந்த இடங்களுக்கும் செல்ல விரும்புகிறார்கள். எனவே சற்று இந்த இடங்களைப் பற்றி அறிமுகம் ஆகிவிடும்.

அடுத்து, புவாத் எனும் இடத்திற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தலைமையில் சென்ற படைப் பிரிவு ஆகும். இது ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ரபியுல் அவ்வல் மாதத்தில் சென்றது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி) அவர்களை மதீனாவின் தலைவராக நியமித்தார்கள். மேலும், தம் ஸஹாபா இருவருடன் குறைஷியர்களின் வணிகக் குழுக்களைத் தடுத்து நிறுத்துவதற்காகப் புறப்பட்டார்கள்.

இந்த வணிகக் குழுவில் உமைய்யா பின் கலஃபும் இருந்தான். மேலும், இதர குறைஷியர்கள் 100 இருந்தனர். 2500 ஒட்டகங்கள் இருந்தன. அன்னார் ரஸ்வா என்ற இடத்திற்குப் பக்கத்தில் உள்ள புவாத் எனும் இடத்தைச் சென்றடைந்தார்கள். ஆனால், அங்கு யாரும் எதிர் வரவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா முனவ்வராவுக்கு திரும்பி வந்துவிட்டார்கள்.

இந்தப் படைப் பிரிவில் கொடியின் நிறம் வெள்ளையாக இருந்து. அதை ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் ஏந்தியிருந்தார்கள். புவாத் பற்றி இந்த அளவிற்கு எழுதப்பட்டுள்ளது:

இவை ஜுஹைனா கோத்திரத்தின் இரண்டு மலைகள் ஆகும். அவை மக்காவிலிருந்து சிரியா செல்லும் வழியில் அமைந்துள்ளன. அவற்றுடன் ரஸ்வா என்ற பிரசித்தி பெற்ற மலை இருக்கின்றது. புவாத் மதீனாவில் இருந்து 100 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. (அட்லஸ் ஸீரத்துன்னபீ (ஸல்) - பக்கம் 206, தாருஸ் ஸலாம் ரியாழ் பதிப்பு, ஹிஜ்ரீ 1424)

உஷைரா என்ற இடத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமையில் சென்ற படைப் பிரிவு ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இவ்வாறு தகவல் கிடைத்தது: அதாவது குறைஷியர்களின் ஒரு வியாபாரக் குழு மக்காவிலிருந்து புறப்பட்டுள்ளது. மக்கத்தினர் அதில் வரும் லாபத்தை முஸ்லிம்களுக்கு எதிராக போரில் பயன்படுத்தலாம் என்று அந்த வியாபாரக் குழுவில் தம் செல்வம் அனைத்தையும் செலுத்தி விட்டார்கள்.

எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஜமாதில் ஊலா மாதம் அல்லது ஓர் அறிவிப்புக்கு ஏற்ப ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ஜமாதிஸ் ஸானீ மாதத்தில் மதீனாவில் இருந்து 150 அல்லது 200 பேருடன் பயணம் மேற்கொண்டு புறப்பட்டார்கள். அன்னார் உஷைரா என்ற இடத்தை அடைந்தபோது அன்னார் வந்து சேர்வதற்கு சில நாட்களுக்கு முன்னரே குறைஷியர்களின் வணிகக் குழு அங்கிருந்து சென்றுவிட்டது என்பது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தெரிய வந்தது.

மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள பனூ மத்லஜ் பகுதியில் யன்பூஃ என்ற இடத்துக்குப் பக்கத்தில் உஷைரா எனுமோர் இடமிருக்கிறது. அன்னார் சில நாட்கள் அங்கு தங்கினார்கள். பனூ முத்லஜ் மற்றும் பனூ ஸம்ரா கோத்திரங்களில் இருந்து அவற்றின் நட்புக் கோத்திரங்களோடு சமரச உடன்படிக்கை செய்தார்கள். அதற்குப் பிறகு மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள்.

இது மக்கத்துக் குறைஷியர்களின் அதே வணிகக் குழு தான். இது சிரியாவிலிருந்து திரும்பி வந்தபோதுதான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீண்டும் அதைப் பின் தொடர்ந்து சென்றார்கள். மேலும், பத்ர் யுத்தம் நிகழ்ந்தது. (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 4, பக்கம் 17, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993-ம் ஆண்டு)

முதல் பத்ர் யுத்தம்: ஹஸ்ரத் ரஸூல்லாஹ் (ஸல்) அவர்கள் உஷைரா படைப் பிரிவுடன் மதீனாவுக்குத் திரும்பி வந்து, 10 நட்கள் கூட ஆகியிருக்காது. அதற்குள் குர்ஸ் பின் ஜாபிர் மதீனாவின் கால்நடைகள் மேய்க்கும் இடத்தின் மீது தாக்குதல் தொடுத்து விட்டான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களைத் தம் பிரதிநிதியாக நியமித்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்துக்கு அருகில் உள்ள ஸஃப்வான் எனும் பள்ளத்தாக்கைச் சென்றடைந்தார்கள். ஸஃப்வான் என்பது பத்ர் மைதானத்துக்கு அக்கம் பக்கத்தில் இருக்கக் கூடிய ஒரு பள்ளத்தாக்கு ஆகும். ஆனால், குர்ஸ் பின் ஜாபிர் வேகமாக

முன்னால் சென்று விட்டான். அன்னாரால் அவனைப் பிடிக்க முடியவில்லை. இந்த யுத்தம் முதல் பத்ர் யுத்தம் எனப்படுகின்றது. இதற்குப் பிறகு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள். (அட்லஸ் ஸீரத்துன்னபீ (ஸல்) - பக்கம் 206, தாருஸ் ஸலாம் ரியாழ் பதிப்பு, ஹிஜ்ரீ 1424) ஏன் முதல் பத்ர் யுத்தம் எனப்படுகிறது? என்றால், பத்ர் மைதானத்துக்கு ஒரு புறம் உள்ள ஸஃப்வான் எனும் இடம் வரை முஸ்லிம்களின் படை சென்றடைந்திருந்தது. இது ஸீரத்துல் ஹல்பியாவில் கூறப்பட்டுள்ளது.

குர்ஸ் பின் ஜாபிர் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் விளக்கம் எழுதியுள்ளார்கள்: அன்னார் கூறுகின்றார்கள்: குர்ஸ் பின் ஜாபிரின் இந்தத் தாக்குதல் ஒரு சாதாரண காட்டுவாசிகளின் கொள்ளை அடித்தலாக இருக்கவில்லை. மாறாக, நிச்சயமாக அவன் குறைஷியர்கள் தரப்பிலிருந்து முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு குறிப்பான எண்ணத்துடன் வந்திருந்தான்.

இன்னும் சொல்லப்போனால், அவனுடைய எண்ணம் குறிப்பாக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதாக இருந்திருக்கலாம். ஆனால், முஸ்லிம்கள் விழிப்புணர்வுடன் இருப்பதைக் கண்டு அவன் அவர்களின் ஒட்டகங்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றுவிட்டான். இதிலிருந்து மக்கத்து குறைஷியர்கள் மதீனாவின் மீது திடீர்த் தாக்குதல் தொடுத்து, தொடுத்து முஸ்லிம்களை அழித்து நாசமாக்கி விட வேண்டும் என்று எண்ணம் கொண்டு விட்டிருந்தார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இதையும் நினைவிற் கொள்ள வேண்டும்! அதற்கு மிக முன்னரே முஸ்லிம்களுக்கு வாளால் போர் புரிவதற்கான அனுமதி கிடைத்து விட்டிருந்ததுதான். அவர்கள் சுயபாதுகாப்புக் கண்ணோட்டத்தில் அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளையும் எடுக்க ஆரம்பித்து விட்டிருந்தார்கள்தான். ஆனால், அதுவரையிலுமே அவர்கள் தரப்பிலிருந்து நிராகரிப்பாளர்களுக்கு நடைமுறையில் எவ்வித பொருளாதார இழப்போ அல்லது உயிரிழப்போ ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கர்ஸ் பின் ஜாபிரின் தாக்குதலால் முஸ்லிம்களுக்கு நடைமுறையில் இழப்பு ஏற்பட்டது. ஆக, முஸ்லிம்கள் தரப்பிலிருந்து குறைஷியர்களின் சவாலை ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்ட பிறகும் கூட நடைமுறையில் போர் புரிவதில் நிராகரிப்பாளர்களே முந்திக் கொண்டிருந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்களின் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூல் - பக்கம் 330, 1996-ம் ஆண்டு பதிப்பு)

பின்னர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் ஜஹ்ஷ் (ரலி) அவர்களின் படைப் பிரிவு: மக்காவுக்கு அருகில் நக்லா என்ற பள்ளத்தாக்கிற்கு இந்தப் படைப் பிரிவு அனுப்பப்பட்டது. இது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ரஜப் மாதத்தில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களை எட்டு முஹாஜிர்களுடன் அனுப்பி வைத்தார்கள். அவர்களில் அன்ஸார் ஸஹாபிகளைச் சேர்ந்த ஒருவர் கூட இருக்கவில்லை.

அவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்துவிட்டு இரண்டு நாள் பயணத்தைக் கழித்த பிறகு அந்தக் கடிதத்தைப் பார்க்க வேண்டும் என்றும் அதில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைப்படி செயல்பட வேண்டும் என்றும், உம்முடன் இருப்பவர்களில் எவரையும் உம்முடன் செல்வதற்கு நிர்பந்திக்கக் கூடாது என்றும் வழிகாட்டல் வழங்கி இருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் இரண்டு நாள்கள் பயணத்தைக் கழித்த பிறகு அந்தக் கட்டளை மடலைத் திறந்து படித்தபோது அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது:

நீர் எமது இந்தக் கடிதத்தைத் திறந்து படிக்கும்போது உமது பயணத்தைத் தொடர்வீராக. எதுவரை என்றால் தாயிஃபுக்கும் மக்காவுக்கும் இடையிலுள்ள நக்லா என்ற இடத்தைச் சென்றடைவீராக. அங்கு குறைஷியர்களுடைய போர் மும்முரங்களின் மீது பார்வை வைத்து அவர்களுடைய நிலைமைகளைப் பற்றி எமக்குத் தெரியப்படுத்துவீராக.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் இந்தக் கடிதத்தைப் பார்த்ததும், கேட்பதும் கட்டுப்படுவதும் என் மீது கடமையாகும் என்று கூறினார்கள். பிறகு, அன்னார் தம்முடன் இருந்தவர்களிடம் ஹஸ்ரத் ரஸுல்லாஹ் (ஸல்) அவர்கள் நான் நக்லாவை நோக்கி செல்ல வேண்டும் என்றும், அங்கு குறைஷியர்களின் பணி மும்முரங்களின் மீது பார்வை வைத்து ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு குறைஷியர்களின் நிலைமையைப் பற்றி எடுத்துக் கூற வேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளார்கள். உங்களில் யாரையும் என்னுடன் செல்வதற்கு நிர்பந்திக்கக் கூடாது என்றும் என்னை தடுத்துள்ளார்கள். எனவே உங்களில் உயிர்த் தியாகம் செய்ய விருப்பம் கொண்டிருப்பவர் என்னுடன் செல்லலாம். எவர் திரும்பிச் செல்ல விரும்புகிறாரோ அவர் திரும்பிச் சென்று விடலாம் என்று கூறினார்கள். ஆனால் அன்னாருடன் இருந்தவர்களில் ஒருவர் கூட திரும்பிச் செல்லவில்லை. அனைவரும் ஹிஜ்ஜாஸை நோக்கிப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள்.

வழியில் ஓரிடத்தில் ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உத்பா பின் ஃகஸ்வான் (ரலி) அவர்கள் ஆகிய இருவரின் ஒட்டகம் தொலைந்து விட்டது. அவர்கள் இருவரும் அதைத் தேடியவாறு பின்தங்கிவிட்டார்கள். அதேவேளையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் மற்ற தோழர்களுடன் நக்லா என்ற இடத்தைச் சென்றடைந்து விட்டார்கள்.

அங்கு குறைஷியர்களின் ஒரு வணிகக் குழு கடந்து சென்றது. அது கஷ்மஷ் எனும் (உயர் ரக) தோலையும் குறைஷியர்களின் வியாபாரப் பொருட்களையும் சுமந்து சென்று கொண்டிருந்தது. அந்த வியாபாரக் குழுவில் அம்ர் பின் ஹஸ்ரமீயும் இருந்தான். மக்கத்துக் குறைஷியர்கள் முஸ்லிம்களைப் பார்த்ததும் பயந்து போயினர். ஹஸ்ரத் உக்காஷா பின் முஹ்ஸின் (ரலி) அவர்களுக்கு முன்னால் வந்தார்கள். அவர்கள் தம் தலையை மழித்து விட்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்த நிராகரிப்பாளர்கள் மன நிம்மதியடைந்தனர். மேலும், பயப்படுதவதற்கு ஒன்றும் இல்லை. இந்த மக்கள் உம்ரா செய்வதற்காக செல்கின்றனர் என்று கூறினார்.

பிறகு, முஸ்லிம்கள் அங்கு இவ்வாறு ஆலோசனை செய்தார்கள்: இன்று ரஜப் மாதத்தின் கடைசி நாளாகும். நாம் அவர்களுடன் சண்டையிட்டால் அவர்களைக் கொன்றுவிட்டால் இது கண்ணியத்திற்குரிய மாதமாக இருக்கின்றது!; ஒருவேளை நாம் இன்று காத்திருந்தோம் என்றால், இவர்கள் இரவோடு இரவாக கண்ணியத்திற்குரிய பகுதியின் எல்லைக்குள் நுழைந்து விடுவார்கள். பிறகு, நம்முடைய கையில் அகப்பட மாட்டார்கள். கடைசியில், வணிகக் குழுவின் மீது தாக்குதல் தொடுத்து விடலாம் என்ற விஷயத்தில் அனைவரும் ஒருமித்தார்கள். இந்த விவரம் முன்னர் ஒருமுறை ஸஹாபிகளின் நற்குறிப்பில் எடுத்துக் கூறப்பட்டுவிட்டது. ஹஸ்ரத் வாகித் பின் அப்தில்லாஹ் தைமீ (ரலி) அம்ர் பின் ஹஸ்ரமீ மீது ஓர் அம்பை வீசிய வீச்சில் அவன் மடிந்துவிட்டான். இரண்டு நபர்களை முஸ்லிம்கள் கைது செய்து விட்டனர். அதேவேளையில் ஒருவன் வெற்றிகரமாக தப்பி ஓடிவிட்டான். பிறகு, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் ஒட்டகங்களையும் அந்த இரண்டு கைதிகளையும் அழைத்துக் கொண்டு மதீனாவில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்னாரிடம், நான் உமக்கு கண்ணியத்திற்குரிய மாதத்தில் போர் புரிய வேண்டும் என்று கட்டளை ஒன்றும் இடவில்லையே! என்று கேட்டார்கள். அன்னார் ஒட்டகங்களையும், இரண்டு கைதிகளையும் அங்கே இருக்க விட்டு விட்டார்கள். அவற்றில் எதையும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள்.

செல்வத்தை அபகரிப்பது நோக்கமாக இருந்தது என்று சிலர் கூறுகிறார்களே! செல்வத்தை அபகரிப்பது நோக்கமாக இருக்கவில்லை. ஏனென்றால், நீர் நல்லது செய்திருக்கின்றீர் என்று அன்னார் தட்டிக் கொடுத்திருப்பார்கள். ஆனால், நீர் தவறிழைத்துள்ளீர் என்று அன்னார் (ஸல்)

கூறினார்கள்.

மறுபுறம் முஸ்லிம்கள் கண்ணியத்திற்குரிய மாதத்தின் கண்ணியத்தை முறித்து விட்டனர் என்று குறைஷியர்களும் கூச்சலிட்டனர். கொல்லப்பட்டவன் அம்ர் பின் ஹஸ்ரமீ ஒரு தலைவனாக இருந்தவன் ஆவான். அத்துடன் அவன் மக்கத்து தலைவனான உத்பா பின் ரபீஆவின் தோழனாகவும் இருந்தான். எனவே, இந்த சம்பவம் குறைஷியர்களின் கோபத் தீயை இன்னும் கொழுந்துவிட்டு எரியச் செய்தது. அவர்கள் முன்னரை விடவும் அதிகம் ஆக்ரோஷமாகவும் ஆவேசத்துடனும் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டனர். எனவே, பெரும்பாலும் பத்ர் யுத்தம், குறைஷியர்களின் ஆயத்தம் பகைமை மற்றும் ஆவேசத்தின் விளைவாக இருந்தது.

சுருக்கமாக் கூறினால், இந்த சம்பவத்தினால் முஸ்லிம்கள் மற்றும் நிராகரிப்பாளர்கள் ஆகிய இரு சாராருக்கும் மத்தியில் பல விஷயங்கள் நடைபெற்றன. கடைசியில் கீழ்வரும் திருக்குர்ஆன் வஹீ இறங்கி முஸ்லிம்களின் மனநிறைவுக்குக் காரணமாக அமைந்தது. அல்லாஹ் கூறுகின்றான்:

اَعُوْذُبِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ـ يَسْــَٔلُوْنَكَ عَنِ
الشَّهْرِ الْحَرَامِ قِتَالٍ فِيْهِ ؕ قُلْ قِتَالٌ فِيْهِ كَبِيْرٌ ؕ
وَصَدٌّ عَنْ سَبِيْلِ اللّٰهِ وَكُفْرٌۢ بِهٖ وَالْمَسْجِدِ الْحَرَامِ ۗ
وَاِخْرَاجُ اَهْلِهٖ مِنْهُ اَكْبَرُ عِنْدَ اللّٰهِ ۚ وَالْفِتْنَةُ اَكْبَرُ مِنَ الْقَتْلِ ؕ
وَلَا يَزَالُوْنَ يُقَاتِلُوْنَكُمْ حَتّٰى يَرُدُّوْكُمْ عَنْ دِيْنِكُمْ اِنِ اسْتَطَاعُوْا

பொருள்: கண்ணியத்திற்குரிய மாதத்தில் போர் செய்வது குறித்து மக்கள் உம்மிடம் வினவுகின்றனர். நீர் அவர்களுக்கு இவ்வாறு பதில் அளிப்பீராக : நிச்சயமாக கண்ணியத்திற்குரிய மாதத்தில் போர் புரிதல் மிகவும் தீய செயலாகும். ஆனால், கண்ணியத்திற்குரிய மாதத்தில் அல்லாஹ்வின் மார்க்கத்தை விட்டு மக்களை வலுக்கட்டாயமாகத் தடுப்பதும், அதற்கும் மேற்பட்டு கண்ணியத்திற்குரிய மாதம் மற்றும் கண்ணியத்திற்குரிய பள்ளிவாசல் ஆகிய இரண்டையும் நிராகரிப்பது. அதாவது, அவற்றிற்கான கண்ணியத்தை முறிப்பது, பிறகு இணை வைப்பாளர்களே! நீங்கள் செய்வது போல், கண்ணியத்திற்குரிய பகுதியிலிருந்து அதில் வசிப்பவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவது, ஆகிய இந்த விஷயங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் பார்வையில் கண்ணியத்திற்குரிய மாதத்தில் போரிடுவதைக் காட்டிலும் பெரும் தீமையாகும்.

கண்ணியத்திற்குரிய மாதத்தில், நாட்டுக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவது அந்தக் குழப்பத்தைத் தடுப்பதற்காக செய்யப்படும் கொலையை விடக் கொடியதாகும். மேலும், முஸ்லிம்களே! நிராகரிப்பாளர்களின் நிலை எப்படி இருக்கின்றது என்றால், அவர்கள் உங்கள் மீது கொண்டிருக்கும் பகைமையில் எந்த அளவு குருடர்களாக ஆகிவிட்டார்கள் என்றால் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும், அவர்கள் உங்களுடன் போர் புரிவதில் இருந்து விலகியிருக்க மாட்டார்கள். மேலும், அவர்கள் ஆற்றல் பெற்றால் உங்களை உங்களது மார்க்கத்தில் இருந்து திருப்பும் வரை உங்களுடனான இந்தப் போரை செய்து கொண்டேயிருப்பர். (2:218)

எவ்வாறு இருப்பினும், இந்த நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களை மார்க்கத்தை விட்டு விலக்குவதற்கு முயற்சி செய்து கொண்டே இருப்பர் என்பதை அல்லாஹ் அறிந்திருந்தான். எனவே அப்பொழுது செய்யப்பட்ட அமலின் மீது அல்லாஹ் எந்த ஒரு கோபத்தையும் வெளிப்படுத்தவில்லை.

மேலும், வரலாற்றில் இருந்து நிரூபணமாவது என்னவென்றால், குறைஷியத் தலைவர்கள் இஸ்லாத்திற்கு எதிரான தமது கொலை பிரச்சாரத்தை கண்ணியத்திற்குரிய மாதங்களில் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்கள். இன்னும் கூறுவதாயின், கண்ணியத்திற்குரிய மாதங்களின் ஒன்றுகூடல்கள் மற்றும் பயணங்களிலிருந்து பயனடைந்தவாறு, அவர்கள் அந்த மாதங்களில் தமது குழப்ப நடவடிக்கைகளில் இன்னும் அதிகம் துரிதமாகிவிட்டார்கள்.

பிறகு வெட்கக் கேட்டின் உச்சகட்டமாக தங்களுடைய உள்ளங்களுக்குப் பொய்யான ஆறுதல் அளிப்பதற்காக அவர்கள் கண்ணியத்திற்குரிய மாதங்களை அவற்றின் இடத்திலிருந்தும் இங்கும் அங்கும் மாற்றியும் வைத்து வந்தனர். அதை அவர்கள் மறதி என்ற பெயரால் அழைத்து வந்தனர்.

எனவே இந்த பதிலால் முஸ்லிம்களுக்குத் திருப்திக் கொள்ளவே நேர்ந்தது.குறைஷியர்களுமே ஓரளவு தணிந்து விட்டனர். வஹீ வந்துள்ளது என்று அவர்களுக்கு தெரிந்துவிட்டது. இதற்கிடையில் அவர்களின் ஆட்களும் தங்களுடைய இரண்டு கைதிகளை விடுவிப்பதற்காக மதீனா வந்தடைந்து விட்டார்கள். ஆனால் அதுவரையிலுமே ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் மற்றும் உத்பா (ரலி) அவர்கள் ஆகிய இருவரும் திரும்பி வந்திருக்கவில்லை. அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, அவர்கள் இருவரும் குறைஷியர்களின் கைகளில் அகப்பட்டு விட்டால், குறைஷியர்கள் அவர்களை உயிரோடு விட மாட்டார்கள் என்ற அச்சம் ஏற்பட்டது. எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்கள் இருவரும் திரும்பி வரும் வரை கைதிகளை விடுவிக்க மறுத்துவிட்டார்கள்.

அன்னார் (ஸல்), என் மக்கள் நலமாக மதீனா வந்தடைந்த பிறகு நான் உங்கள் ஆட்களை விட்டு விடுவேன் என்று கூறினார்கள். ஆக அவர்கள் இருவரும் மதீனாவுக்குத் திரும்பி வந்து விட்டார்கள். எனவே அன்னார் ஈட்டுத் தொகையைப் பெற்று விட்டு இரு கைதிகளையும் விடுவித்து விட்டார்கள். (ஹக்காயிகுல் ஃபுர்கான், தொகுதி 3, பக்கம்-235)

பெரிய பத்ர் யுத்தம்: திருக்குர்ஆனில் இந்த யுத்தம் யவ்முல் ஃபுர்கான் என்று கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஃபுர்கான் - உண்மைக்கும் பொய்யிக்கும் இடையிலான வித்தியாசம் ஏற்படுதல் பத்ர் யுத்தம் அன்று இருந்தது. அன்று எதிரிகளின் மிகவும் வலுவான ஆற்றல் கொண்டிருந்த தலைவர்கள் அழிந்து போனார்கள். முஸ்லிம்களுக்கு வெற்றியும், ஆதிக்கமும் கிடைத்தது. (ஹக்காயிகுல் ஃபுர்கான், தொகுதி 3, பக்கம்-235)

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பிறிதோரிடத்தில் ஃபுர்கான் என்ற சொல்லின் பொருளை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: இந்த சொல்லுக்கு இந்தப் பொருள் இருப்பது எனக்குத் திருக்குர்ஆனில் இருந்து தெரிய வந்துள்ளது. அதாவது, எந்த வெற்றிக்குப் பிறகு எதிரியின் முதுகெலும்பு உடைந்து போய் விடுகிறதோ அந்த வெற்றிக்குப் பெயர் தான் ஃபுர்கான் என்பதாகும். மேலும், இது பத்ர் நாளன்று நடைபெற்றது. (ஹக்காயிகுல் ஃபுர்கான், தொகுதி 3, பக்கம்-306) இந்த யுத்தத்தை பத்ருஸ் ஸானியா - இரண்டாவது பத்ர் யுத்தம், பத்ருல் குப்ரா - பெரிய பத்ர் யுத்தம், பத்ருல் உஸ்மா - மகத்துவ மிக்க பத்ர் யுத்தம் மற்றும் பத்ருல் கிதால் - பழிவாங்குதலுக்கான பத்ர் யுத்தம் என்றும் கூறப்படுகிறது. (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 197, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2002-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இவ்வாறு தகவல் கிடைத்தது; அபூ ஸுஃப்யான் குறைஷியர்களின் வணிகக் குழுவை அழைத்துக் கொண்டு சிரியாவிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கின்றார். அதில் ஆயிரம் ஒட்டகங்கள் இருக்கின்றன. அதில் குறைஷியர்களின் மிகப் பெரும் மூலதனம் இருந்தது.

ஒருவரிடம் ஒரு மஸ்கால், அதாவது ஒருவரிடம் மூன்றரை நாலரை கிராம் அளவு தங்கத்தின் எடைக்கு நிகரான தங்கம் இருந்திருந்தாலும் அல்லது செல்வம் இருந்திருந்தாலும் அவர் அந்த செல்வத்தையும் இந்த வியாபாரக் குழுவில் செலுத்தி இருந்தார். அதில் ஒரு மிகப் பெரிய தொகையின் மூலதனம் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்த வியாபாரக் குழுவில் 30, 40 பேர் அல்லது ஓர் அறிவிப்புக்கு ஏற்ப 70 பேர் இருந்தனர். எந்தக் குழுவைப் பின் தொடர்ந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதற்கு முன்னரும் சென்றிருந்தார்களோ உஷைரா என்ற இடம் வரை சென்றடைந்திருந்தார்களோ அது இதே வியாபாரக் குழுதான்.

ஆனால், இந்த வியாபாரக் குழு சிரியா பக்கம் சென்று விட்டிருந்தது. இந்தத்

திட்டத்திற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு ஜமாதில் ஊலா மாதத்தில் அல்லது ஜமாதில் உக்ரா மாதத்தில் புறப்பட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த வியாபாரக் குழு திரும்பி வரும் தகவலைப் பெற்று, முஸ்லிம்களைத் தம்முடன் புறப்படுமாறு அழைத்தார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்:

அது குறைஷியர்களின் வியாபாரக் குழுவாகும். அதில் அவர்களின் செல்வங்கள் இருக்கின்றன. எனவே நீங்கள் புறப்படுங்கள். ஒருவேளை அல்லாஹ் உங்களுக்குப் போர் செல்வங்களை வழங்கலாம்.

சிலர் ஆட்சேபனை செய்வதற்கு மட்டும் சந்தர்ப்பம் தேடக் கூடிய வழக்கமுடையவர்களாக இருக்கின்றனர். அல்லது குறைவான அறிவுடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் முஸ்லிம்கள் மதீனாவுக்குச் சென்று செல்வங்களை சூறையாட ஆரம்பித்து விட்டனர் என்று ஆட்சேபனை செய்கின்றார்கள். இந்த வியாபாரக் குழுவைப் பின்தொடர்ந்ததை உதாரணமாக முன்வைக்கின்றனர்.

இது முற்றிலும் அறியாமையும் அறிவீனமும் ஆகும். மேலும், அப்பொழுது இருந்த போர் நிலைமைகளைப் பற்றி அறியாததன் விளைவாகும். ஏனெனில், குறைஷியர்களின் இந்த வியாபாரக் குழுவைத் தடுத்து நிறுத்துவது ஒன்றும் ஆட்சேபனைக்குரிய விஷயமாக இருக்கவில்லை.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இதற்கான விளக்கத்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்: வியாபாரக் குழுவைத் தடுத்து நிறுத்துவதற்காகப் புறப்பட்டது ஒருபோதும் ஆட்சேபனைக்குரியதாக இருக்கவில்லை.

ஏனெனில், முதல் விஷயம் இந்த குறிப்பிட்ட வியாபாரக் குழுக்காக முஸ்லிம்கள் புறப்பட்டிருந்தனர். இது ஓர் அசாதாரணமான வியாபாரக் குழுவாக இருந்தது. அதில் குறைஷியர்களின் ஒவ்வோர் ஆண், பெண்ணின் வியாபாரப் பங்கு இருந்தது. இதிலிருந்து இது தொடர்பாக குறைஷிய தலைவர்களின் எண்ணம் அதன் இலாபத்தை முஸ்லிம்களுக்கு எதிரான போரில் பயன்படுத்த வேண்டும் என்று இருந்தது தெரிய வருகிறது.

எனவே இந்த இலாபத் தொகையே உஹது போருக்கான ஆயத்தத்தில் செலவிடப்பட்டது என்பது வரலாற்றில் இருந்து தெரிய வருகிறது. எனவே இந்த வியாபாரக் குழுவைத் தடுத்து நிறுத்துவது போர்த் திட்டங்களின் முக்கிய பங்காக இருந்தது. இரண்டாவது, பொதுவாகவும் குறைஷியர்களின் வணிகக் குழுக்களைத் தடுத்து நிறுத்துவது ஏன் அவசியமாக இருந்தது? என்றால், இந்த வணிகக் குழுக்கள் ஆயுதம் ஏந்தி இருந்தன.

மேலும், மதீனாவை மிகவும் ஒட்டி கடந்து சென்றன. அவர்களால் முஸ்லிம்களுக்கு எப்பொழுதும் ஆபத்து இருந்து வந்தது. அதைத் தடுத்து நிறுத்துவது அவசியமாக இருந்தது.

மூன்றாவது, இந்த வியாபாரக் குழுக்கள் எங்கெல்லாம் கடந்து சென்றனவோ அங்கெல்லாம் முஸ்லிம்களுக்கு எதிராக அரபுக் கோத்திரங்களில் கடுமையாக தூண்டிவிட்டுக் கொண்டே சென்றன. இதன் காரணமாக முஸ்லிம்களின் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. எனவே, அவர்களின் வழியை அடைப்பது தற்காப்பு மற்றும் சுய பாதுகாப்பிற்கான ஏற்பாட்டின் அங்கமாக இருந்தது.

நான்காவது, குறைஷியர்கள் பெரும்பாலும் வியாபாரத்தால் வாழ்வைக் கழித்து வந்தார்கள். எனவே அந்த வியாபாரக் குழுக்களைத் தடுத்து நிறுத்துவது அநீதியிழைக்கும் குறைஷியர்களை நிதானத்திற்கு கொண்டு வருவதிலும் அவர்களை அவர்களுடைய போர் நடவடிக்கைகளில் இருந்து விலக்கி வைப்பது மற்றும் சமரசத்திற்கும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் நிர்பந்திப்பதற்கான ஓர் உன்னதமான வழியாக இருந்தது.

இன்றைய காலத்தில் இவ்வாறு போர்களைத் தடுப்பதற்காக சில நாடுகளின் மீது தடைகள் விதிக்கப்படுகின்றன. அதுவும் தவறான முறையில் தடைகள் விதித்து விடுகின்றார்கள். அநீதி இழைத்தவாறு விதிக்கின்றார்கள். ஆனால், இதுவும் கூட ஒருவகையான தடை விதிக்கக் கூடிய செயலாக இருந்தது.

பிறகு, அந்த வியாபாராக் குழுக்களைத் தடுத்து நிறுத்துவதன் நோக்கம் சூறையாடுவதாக இருக்கவில்லை. மாறாக, திருக்குர்ஆன் தெள்ளத் தெளிவாக கூறுவதுபோன்று, சுயமே அந்த முக்கிய பணியில் முஸ்லிம்கள் அந்த வியாபாரக் குழுவைத் தடுப்பது அந்த செல்வங்களின் காரணமாக இருக்கவில்லை. மாறாக, எதனால் இருந்தது என்றால், அதற்கு நிகராக குறைவான இன்னல் மற்றும் குறைவான கஷ்டத்தை மேற்கொள்ளலாம் என்றிருந்தது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த வியாபாரக் குழுவைப் பற்றிய செய்திகளை எட்ட வைப்பதற்காக ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸயீது பின் ஸைது (ரலி) அவர்கள் ஆகிய தம் ஸஹாபா இருவரை முன்னால் அனுப்பி வைத்துவிட்டார்கள். இந்த இரண்டு நபித்தோழர்களும் மதீனாவிலிருந்து புறப்பட்டு விட்டார்கள்.

வியாபாரக் குழுக்கள் பற்றிய செய்திகளை அறிந்து கொண்ட பிறகு, மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள். அப்போது அவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டது தெரிய வந்தது. எனவே இவ்விருவரும் பத்ர் மைதானத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். ஆனால், வழியில் இவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அன்னார் பத்ர் யுத்தத்தை முடித்துவிட்டு திரும்பி வரும் போது சந்தித்தார்கள்.

எனவே இவ்விரு நபித்தோழர்களும் பத்ர் யுத்தத்தில் கலந்து கொள்ள முடியவில்லைதான்; ஆயினும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இவர்கள் இருவருக்கும் போர் செல்வத்திலிருந்து பங்கு பிரித்துக் கொடுத்தார்கள். (அஸ்ஸீரத்தல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 203)

மறுபுறம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நபித்தோழர்களை உடன் அழைத்துக் கொண்டு அவருடைய வியாபாரக் குழுவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக புறப்பட்டு விட்டார்கள் என்ற தகவல் அவருடைய ஒற்றர்கள் தரப்பிலிருந்து அபூஸுஃப்யானுக்கு கிடைத்தது.

இவ்வாறும் கூறப்படுகிறது: அபூஸுஃப்யானை ஒரு மனிதன் சந்தித்தான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் இருந்தே அவரது வியாபாரக் குழுவின் வழியைத் தடுக்க நினைத்தார்கள் என்றும், ஆனால் இப்பொழுது தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை வழியில் அந்த வியாபாரக் குழு திரும்பி வருவதற்காகக் காத்திருக்க கண்டேன் என்றும் அவன் அவரிடம் கூறினான்.

இந்தச் செய்தியைக் கேட்ட அபூஸுஃப்யான் மிகவும் அச்சமடைந்தார். அவர் ஸம்ஸம் பின் அம்ர் ஃகப்பாரீ எனும் நபருக்கு சிறிது வெகுமதி கொடுத்து மக்காவை நோக்கி அனுப்பி வைத்தார். மேலும், அவனிடம், முஹம்மது ( (ஸல்) அவர்கள் ) தம் தோழர்களுடன் உங்கள் வியாபாரக் குழு மீது தாக்குதல்


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

தொடுப்பதற்காக புறப்பட்டுள்ளார்கள் என்று மக்கத்தினரிடம் சொல் என்று கூறினார்.

எனவே ஸம்ஸம் மிகவும் வேகமாகப் புறப்பட்டு விட்டான். அபூஸுஃப்யானின் இந்த ஒற்றன் மக்காவைச் சென்றடைந்ததும் அரபு நாட்டின் வழக்கப்படி மிகவும் திகிலூட்டக் கூடிய வடிவத்தை உருவாக்கிக் கொண்டு மிகவும் உரத்த குரலில், மக்கா வாசிகளே! முஹம்மத் (ஸல்) அவர்கள்) மற்றும் அவருடைய தோழர்கள் உங்களுடைய வியாபாரக் குழுவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக புறப்பட்டுள்ளார்கள்; செல்லுங்கள். அதைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்று கூச்சலிட ஆரம்பித்து விட்டான்.

மறுபுறம் அபூஸுஃப்யான் மிகவும் சாதுரியமாக தகவல்களை சேகரித்தவாறு முஸ்லிம்களின் இந்தப் படையிலிருந்து தப்பித்த வண்ணம் பயணத்தை தொடங்கினார். அவர் பத்ரின் நீருற்றை அடைந்ததும், அங்கு ஒரு நபரிடம் இங்கே உனக்கு யாராவது தென்பட்டார்களா? என்று கேட்டார்.

அதற்கு அவர் இங்கு இரண்டு பேர் வந்தார்கள். அதோ! அந்தக் குன்றின் அருகே தங்களது ஒட்டகங்களை அமர வைத்தார்கள். மேலும், தண்ணீர் எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள் என்றார்.

அபூஸுஃப்யான், ஒட்டகங்கள் இருந்த இடத்திற்குச் சென்றார். அங்கு ஒட்டகங்களின் புழுக்கைகள் கிடந்தன. அவர் அதில் ஒன்றை எடுத்து, அதை உடைத்தபோது அதில் பேரீத்தம் பழத்தின் கொட்டை இருந்தது. அவர் அதைப் பார்த்துவிட்டு இது யஸ்ரபின் (மதீனாவின்) தீவனமாகும் என்று கூறினார். மேலும் மதீனா வாசிகள் தமக்கு அருகிலேதான் எங்கேயோ இருக்கின்றார்கள் என்பதைப் புரிந்து கொண்டார்.

எனவே அவர் வேகமாக தனது வியாபாரக் குழுவிடம் திரும்பி வந்தார். தன்னுடைய கூட்டாளிகளைப் பிரசித்தி பெற்ற வழியில் இருந்து விலக்கி விட்டவாறு வேகமாக முன்னோக்கிச் சென்று விட்டார். இது தொடர்பாக ஆதிக்கா பின்த் அப்தில் முத்தலிப் அவர்களின் வினோதமான கனவு ஒன்றும் இருக்கின்றது. அந்தக் கனவு மிகவும் உண்மையானதாக நிரூபணமாகின்றது.

அந்தக் கனவு இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரியும் உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்களின் தாயாருமான இவர் இஸ்லாத்தை ஏற்றது தொடர்பாக இருவிதமான கருத்துகள் உள்ளன. சிலரது பார்வையில் இவர் இஸ்லாத்தை தழுவியிருந்தார். ஆனால், பெரும்பாலானவர்களின் பார்வையில் இவர் இஸ்லாத்தை தழுவியிருக்கவில்லை.

எவ்வாறு இருப்பினும், இவர் அபூஸுஃப்யானின் ஒற்றன் ஸம்ஸம் மக்கா வந்தடைவதற்கு மூன்று இரவுகளுக்கு முன்னர் ஒரு கனவு கண்டார். அது அவரை அச்சத்திற்குள்ளாக்கியது. அவர் தம் சகோதர் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் அவர்களை அழைத்து அனுப்பினார். அவர் கூறினார்:

சகோதரரே! இறைவன் மீது ஆணையாக! இன்று இரவு நான் ஒரு கனவு கண்டேன். அது என்னை மிகவும் அச்சுறுத்தி விட்டது. உன் சமுதாயத்திற்குக் கண்டிப்பாக ஏதோ பேராபத்தோ, இன்னலோ வரவிருப்பது எனக்குத் தெரிகிறது. நான் உன்னிடம் சொல்லப் போகும் அந்த ரகசியத்தை நீ மறைத்து வைக்க வேண்டும்.

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஆத்திக்கா அப்பாஸிடம், நீ! இந்த விஷயத்தை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்று எனக்கு உறுதியளிக்காத வரை நான் உன்னிடம் சொல்ல மாட்டேன். ஏனெனில், மக்கத்து குறைஷியர்கள் இந்த விஷயத்தைக் கேட்டுவிட்டால் அவர்கள் நமக்குத் தொல்லை கொடுப்பார்கள். நம்மைப் பழித்துரைப்பார்கள் என்று கூறினார்.

எனவே, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அவருக்கு உறுதி அளித்தார்கள். எவ்வாறு இருப்பினும், பிறகு ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் நீ! என்ன பார்த்தாய்? என்று கேட்டார்கள். ஆத்திக்கா கூறினார்: நான் கனவு பார்த்தேன். ஒருநபர் ஒட்டகத்தின் மீது பயணித்து வருகிறார். அப்தஹ் மைதானத்தில் நின்றுவிட்டார்.

மக்கா மற்றும் மினா ஆகிய இரண்டும் அப்தஹ் எனபபடுகிறது. இது மினாவுக்கு மிகவும் அருகில் உள்ளது. பிறகு அவர் உரத்த குரலில் இவ்வாறு கூறினார்: மக்களே! மூன்று நாள்களுக்குள் உங்களது கொலைக்களத்தை நோக்கிச் சென்று விடுங்கள்.

ஆத்திக்கா கூறுகிறார்: பிறகு, நான் பார்த்தேன். மக்கள் அந்த நபருக்கு அருகில் ஒன்றிணைந்து விட்டார்கள். பிறகு, அவர் பள்ளிவாசலில் அதாவது கஅபா ஆலயத்தில் நுழைந்தார். மக்கள் அவருக்குப் பின்னாலேயே சென்றார்கள். அவரைச் சுற்றி மக்கள் ஒன்று கூடியிருந்தபோது நான் அவரது ஒட்டகம் அவரை ஏற்றிக் கொண்டு கஅபாவின் தளத்தின் மீது நிற்பதைப் பார்த்தேன். பிறகு, அவர் அதே போன்று உரத்த குரலில் கூறினார்:

மக்களே! மூன்று நாள்களுக்குள் உங்களது கொலைக்களத்தை நோக்கிச் சென்று விடுங்கள். பிறகு, நான் பார்த்தேன். அவரது ஒட்டகம் அபூ குபைஸ் மலையின் உச்சிக்கு கொண்டு சென்று நின்றுவிட்டது.

அபூ குபைஸ் மலை பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இது மக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற மலையின் பெயராகும். பிறகு அங்கிருந்தும் இவ்வாறு உரத்த குரலில் அழைத்தார். பிறகு, அவர் அந்த மலையிலிந்து ஒரு பாறையைக் கீழே உருட்டி விட்டார். கீழே வந்தடைந்ததும் அந்தப் பாறை துண்டு துண்டாக ஆகிவிட்டது. மக்காவின் வீடுகளில் அந்தப் பாறையின் ஒரு துண்டு செல்லாத எந்த வீடும், மாளிகையும் பாக்கி இல்லை.

இதைக் கேட்டு ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) ஆத்திக்காவிடம் இறைவன் மீது ஆணையாக! இந்தக் கனவோ மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நீயும் இதை ரகசியமா வைத்திரு. யாரிடமும் இதைப் பற்றி சொல்லாதே என்று கூறினார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) ஆத்திக்காவின் வீட்டில் இருந்து புறப்பட்டார்கள். வழியில் வலீது பின் உத்பாவைச் சந்தித்தார்கள்.

இவன் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் தோழன் ஆவான். சுயம் தம் சகோதரியிடம் யாரிடமும் சொல்லாதே! என்று கூறிவிட்டார்கள். ஆனால், அவர்கள் வலீதிடம் அந்தக் கனவைப் பற்றி கூறிவிட்டார்கள். ஆயினும், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) யாரிடமும் இதை சொல்லக் கூடாது என்று அவனைத் தடுத்து விட்டார்கள். ஆனால், ஒருமுறை ஒரு விஷயம் வெளியேறிய பிறகு அது வெளியே சென்றுவிடுகிறது.

வலீத் தன் தந்தை உத்பாவிடம் இதைக் கூறிவிட்டான். இவ்வாறு இந்த விஷயம் மக்காவில் பரவி விட்டது. எங்கு இரண்டு நபர்கள் ஒன்றாக அமர்கிறார்களோ அங்கு இந்தக் கனவைப் பற்றியே பேசி வந்தார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அடுத்த நாள் காலையில் நான் கஅபா ஆலயத்தை வலம் வருவதற்காகச் சென்றபோது அங்கு அபூஜஹ்ல் குறைஷியர்களின் சில மக்களுடன் உட்கார்ந்திருந்தான். அவன் என்னைப் பார்த்து அபுல் ஃபஸ்லே! இது ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் புனைப் பெயராகும். வலம் வந்து முடித்த பிறகு சற்று என்னிடம் வந்து செல்! என்று கூறினான்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் வலம் வந்து முடித்த பிறகு அவனிடம் சென்றேன். அப்பொழுது அவன் என்னிடம் அப்துல் முத்தலிப் கோத்திரத்தைச் சேர்ந்தவரே! உங்கள் மத்தியில் எப்போதிருந்து பெண் நபி பிறக்க ஆரம்பித்து விட்டார்? என்று கேட்டான். நான் என்ன அர்த்தம்? என்று கேட்டேன். அதற்கு அவன், உங்கள் ஆண்களோ நபித்துவ வாதம் புரிந்தார்கள்தான் - அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுட்டிக் காட்டினான்- இப்பொழுது உங்கள் பெண்களும் நபித்துவ வாதம் புரிய ஆரம்பித்து விட்டார்கள். ஆத்திக்கா என்ன கனவு பார்த்திருக்கிறாள்? என்று கேட்டான்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அவர் என்ன கனவு பார்த்தார்? என்று நான் கேட்டேன். அதற்கு அபூ ஜஹ்ல் கூறினான்: அவள் கூறுகிறாள்: ஒருவர் ஒட்டகத்தில் வருவதை நான் பார்த்தேன். அந்த நபர் இவ்வாறு குரல் கொடுத்தார். பிறகு, மலையிலிருந்து ஒரு பாறையை உருட்டி விட்டார்.

அதாவது, முழு கனவையும் எடுத்துக் கூறினான். பிறகு, அபூ ஜஹ்ல் நாங்கள்

மூன்று நாள்கள் வரை காத்திருக்கின்றோம். இதேபோன்று கனவுக்கு ஏற்பவே இந்த சம்பவம் நிகழ்ந்து விட்டால் சரி! இல்லை என்றால் நீங்கள் அரபு நாட்டில் எல்லாரையும் விடப் பெரிய பொய்யர்கள் என்று எழுதி நாங்கள் கஅபா ஆலயத்தில் தொங்க விட்டு விடுவோம் என்று கூறினான்.

அப்பாஸ் கூறுகின்றார்கள்: இறைவன் மீது ஆணையாக! வேறு வழியின்றி நான் அந்தக் கனவைப் பொய்ப்பிக்க வேண்டி வந்தது. அவனிடம், நான் அவர் எந்தக் கனவும் பார்க்கவில்லை என்று கூறிவிட்டேன். ஆத்திக்கா கனவு பார்த்ததை நான் மறுத்து விட்டேன். பிறகு, நாங்கள் அனைவரும் அந்த சபையிலிருந்து எழுந்து விட்டோம்.

மாலையில் நான் வீடு திரும்பியபோது பனூ முத்தலிப் கோத்திரத்துப் பெண்கள் அனைவரும் என்னிடம் வந்தார்கள். அவர்கள் என்னிடம், முதலிலோ அந்த மோசமான தீயவன் உங்கள் ஆண்கள் மீது அவதூறு சுமத்திக் கொண்டிருந்தான். அதையோ நீங்கள் பொறுத்துக் கொண்டீர்கள். இப்பொழுது பெண்களையும் பழித்துக் கூறுகின்றான். ஆனால், நீங்கள் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். அவனது வெட்கக்கேடான விஷயங்களுக்கு அவனுக்கு எந்த பதிலையும் கொடுக்கவில்லை. உங்களுடைய தன்மானம் எங்கே சென்றுவிட்டது? என்று கேட்டார்கள்.

ஆக, வம்சத்து பெண்கள் அவர்களுக்கு சற்று கோபமூட்டினார்கள். அப்பாஸ் கூறுகிறார்கள்: நான் அவர்களிடம், இறைவன் மீது ஆணையாக! நான் இப்படித்தான் செய்து விட்டேன். எனது பார்வையில் இதைவிடப் பெரிய குற்றம் வேறு ஒன்றும் இல்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! இப்பொழுது நான் அவனிடம் செல்வேன். அவன் மீண்டும் இதுபோல் ஏதாவது பேசினால் பிறகு நான் அவனது கதையை முடிப்பதற்காக உங்கள் தரப்பிலிருந்து இழப்பீட்டை செலுத்தி விடுவேன்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஆத்திக்கா கனவு கண்டபோது மூன்றாவது நாள் காலையில் நான் வீட்டிலிருந்து புறப்பட்டேன். மேலும், அன்று என்னிடம் ஏற்பட்ட தவறுக்கு இன்று நான் பழிதீர்ப்பேன் என்று கடுமையான கோபத்தில் இருந்தேன். நான் பள்ளிவாயிலுக்குள் நுழைந்தபோது அபூ ஜஹ்லைக் கண்டேன். அவன் சுறுசுறுப்பான உடலும் கூர்மையான நாவும் உடையவனாக இருந்தான்.

இறைவன் மீது ஆணையாக! அவன் முன்னர் பேசியதைப் போன்று மீண்டும் ஏதாவது பேசட்டும்! நான் அவனுடைய கணக்கை தீர்த்துவிடுகிறேன் என்று நினைத்துக் கொண்டு அவனை நோக்கி முன்னேறினேன். ஆனால், அபூ ஜஹ்ல் வேகமாக ஓடி, பள்ளியின் அதாவது கஅபா ஆலயத்தின் கதவை நோக்கி செல்வதைப் பார்த்தேன்.

எனது உள்ளத்தில் இவன் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக! இவனுக்கு என்ன ஆகிவிட்டது? நான் அவனை ஏதாவது பழித்துக் கூறிவிடுவேனா? என்ற அச்சத்தில் அவன் இவ்வாறு ஓடிவிட்டானா? என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், உண்மையில் விஷயம் என்னவென்றால் அவன் ஸம்ஸம் பின் அம்ர் ஃகிஃப்பாரீ உடைய உரத்த குரலைக் கேட்டு விட்டிருந்தான். அது எனக்குக் கேட்கவில்லை. மேலும், ஸம்ஸம் ஊருக்கு நடுவில் தனது ஒட்டகத்தில் நின்று கொண்டு உரத்த குரலில் கத்தி அழைத்துக் கொண்டிருந்தான்.

வியாபாரக் குழு: அதாவது, உங்களது அந்த வியாபாரக் குழுவை காப்பாற்றுங்கள். அதனிடம் உங்களுடைய வியாபாரப் பொருட்கள் இருக்கின்றன. அது அபூ ஸுஃப்யானுடன் வந்து கொண்டிருக்கின்றது. முஹம்மத் (ஸல்) அவர்கள்) மற்றும் அவருடைய தோழர்கள் அதன் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். நான் இதைக் கற்பனை செய்து கூட பார்க்கவில்லை.

அவன் கூறினான்: தாக்குதல் தொடுத்துவிட்டார்கள். குறித்த நேரத்தில் நீங்கள் அங்கு சென்றடைந்து விடுவீர்கள் என்று நான் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. அதாவது, முடிந்த அளவுக்கு விரைவாக அங்கு சென்று விடுங்கள். நீங்கள் அதற்கு உதவி செய்வதற்காக சென்று சேருவீர்கள் என்று எனக்குத் தோன்றவில்லை.

எவ்வாறு இருப்பினும் ஹஸ்ரத் அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்தப் புதிய நிகழ்வு என்னையும் அவனையும் (அபூஜஹ்லையும்) எந்த அளவு மூழ்கச் செய்து விட்டது என்றால், எங்களால் முதலில் நடந்த அந்த விஷயத்தில் கவனம் செலுத்த முடியவில்லை.

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: மக்கத்து குறைஷியர்கள் ஸம்ஸம் உடைய ஓசையைக் கேட்டபோது அவர்கள் மிகவும் கோபத்தில் வந்துவிட்டார்கள். போருக்காக மக்களைத் தூண்டி விட ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் இவ்வாறு கூற ஆரம்பித்து விட்டார்கள்: முஹம்மத் (ஸல்) அவர்கள்) மற்றும் அவருடைய தோழர்கள் இது இப்னு ஹஸ்ரமீயின் வியாபார குழுவைப் போன்றது என்று நினைக்கிறார்களா? ஒருபோதும் அல்ல. இறைவன் மீது ஆணையாக! இது அப்படி அல்ல என்பது அவர்களுக்குத் தெரிந்து விடும்.

அம்ர் பின் ஹஸ்ரமீயின் வியாபாரக் குழு மற்றும் முஸ்லிம்களின் கைகளால் அவன் கொல்லப்பட்டது பற்றிய குறிப்பு அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷின் படைக் குழுவைப் பற்றிக் கூறும்போது கூறப்பட்டுவிட்டது. இப்பொழுது நான் முன்னர் அதைக் கூறினேன். அதில் முஸ்லிம்கள் மிகவும் எளிமையாக இப்னு ஹஸ்ரமீயைக் கொன்று விட்டிருந்தார்கள். மேலும் அவனது பொருளையும் உடைமைகளையும் கைப்பற்றிக் கொண்டார்கள்.

எவ்வாறு இருப்பினும், இப்பொழுது மக்கத்து குறைஷியர்கள் ஆயத்தம் மேற்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். ஒவ்வொருவரும் போருக்காக ஒன்று, தானே புறப்பட்டார் அல்லது தனது இடத்தில் தன் செலவில் வேறு யாரையாவது அனுப்பி வைத்தார். அவர்களின் ஒரு தலைவன் கூறினான்: நீங்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள்) மற்றும் அவருடைய தோழர்களையும் யஸ்ரப் வாசிகளுக்கும் உங்களுடைய செல்வங்களை சூறையாடி எடுத்துச் செல்ல அனுமதித்து விடப் போகிறீர்களா?

எவருக்குப் பொருள் தேவையோ என்னுடைய செல்வம் அவருக்காக இருக்கிறது. எவருக்கு உணவுக்கான பொருள்கள் தேவையோ அதுவும் இருக்கிறது.

ஒருவர் 200 தீனார், ஒருவர் 300, ஒருவர் 500 தீனார் எனக் கொடுத்தனர். மேலும், எங்கு வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் செலவு செய்து கொள்ளுங்கள் என்றார். ஒருவர் 20 ஒட்டகத்தைப் போருக்காக கொடுத்துவிட்டார். சிலர் போருக்கு செல்பவர்களின் வீட்டு மக்களின் செலவுகளுக்கான பொறுப்பேற்றுக் கொண்டார். யாரால் போருக்குத் தானே செல்ல முடியவில்லையோ அவர் தனது இடத்தில் தன் செலவில் வேறொருவரை அனுப்பி வைத்தார். இவ்வாறு இரண்டு அல்லது மூன்று நாட்களில் போருக்கான ஆயத்தம் முழுமையடைந்து விட்டது. (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 4, பக்கம் 27, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993-ம் ஆண்டு) இங்கு இதையும் நினைவிற் கொள்ள வேண்டும்! அந்த மனிதனோ உடனடியாக சென்று சேருங்கள் என்று அறிவிப்பு செய்தான். ஆனால், அவர்கள் இரண்டு மூன்று நாள்கள் போருக்காக நன்றாக ஆயத்தம் மேற்கொண்டார்கள்.

இந்த ஆயத்தம் செய்வதே மக்கத்து நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களோடு முறையாக போர் செய்வதற்கு சாக்குப் போக்கைத் தேடிக் கொண்டிருந்தார்கள் என்பதைக் கூறுகிறது.

ஏனென்றால், வியாபாரக் குழுவைக் காப்பாற்றுவது மட்டுமே நோக்கமாக இருந்திருந்தால் இந்த செய்தி கிடைத்த விதத்தில் உடனடியாக சென்றடைந்திருப்பார்கள். யாருடைய கையில் என்ன ஆயுதம் வந்ததோ அதை எடுத்துக் கொண்டு புறப்பட்டிருப்பார். ஆனால், இப்படி நடக்கவில்லை. மாறாக, அவர்கள் வியாபாரக் குழுவுக்காக அல்லாமல் போருக்காக ஆயுத்தம் மேற்கொண்டு சென்றார்கள்.

பிறகு, குறைஷியர்களின் தலைவர்கள் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: குறைஷியர்களின் ஐந்து தலைவர்கள் உமைய்யா பின் கலஃப், உத்பா பின் ரபீஆ, ஷீபா பின் ரபீஆ, ஸம்ஆ பின் அஸ்வத் மற்றும் ஹக்கீம் பின் ஹஸ்ஸாம் ஆகியோர் போருக்கு செல்ல

வேண்டுமா? கூடாதா? என்று அம்புகளை வைத்து குலுக்கி போட்டுப் பார்த்தார்கள்.

அதில் இந்த மக்கள் போருக்கு செல்லக் கூடாது என்று மறுக்கக் கூடிய அம்பு வந்தது. அதாவது, எதில் போர் செய்யாதீர்கள் என்று எழுதப்பட்டிருந்ததோ அந்த அம்பு வந்தது. எனவே இந்த மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போருக்கு செல்லக் கூடாது என்று முடிவெடுத்து விட்டார்கள்.

பிறகு, அபூ ஜஹ்ல், அவர்களிடம் வந்தான். அவன் அவர்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தினான். இது தொடர்பாக உக்பா பின் ஆபூ மூஈத் மற்றும் நஸ்ர் பின் ஹாரிஸ் ஆகியோரும் அபூ ஜஹ்லுடன் ஒத்துழைத்தார்கள். அந்த மக்களை உடன் அழைத்து செல்ல வேண்டும் என வற்புறுத்தினார்கள்.

இறைவன் மீது ஆணையாக! நீங்கள் இருவரும் போருக்கு செல்லவில்லை; மாறாக, உங்களுடைய கொலைகளத்துக்கு செல்கிறீர்கள் என்று அவர்களிடம், உத்பா மற்றும் ஷீபாவின் அடிமை கூறினான். இதைக் கேட்ட அவர்கள் இருவரும் போருக்கு செல்லக் கூடாது என்று தீர்மானித்து விட்டிருந்தார்கள்.

ஆனால், அபூ ஜஹ்ல் எந்த அளவு அதிகமாக வற்புறுத்தினான் என்றால், இவர்கள் இருவரும் நாம் வழியிலேயே திரும்பி வந்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் எல்லாருடனும் செல்லத் தயாராகி விட்டார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 200 -201, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2002-ம் ஆண்டு பதிப்பு) போருக்காக காஃபிர்களின் ஆயத்தம் மற்றும் புறப்படுதல் ஆகியவற்றைப் பற்றிய மேற்கொண்ட விளக்கமும் அதன் சம்பவங்களும் இருக்கின்றன. இனிவரும் காலத்தில் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ். மிகவும் விரிவான விஷயம் ஆகும்.

தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

## மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)

நஃபிஸின் மறுத்தலுக்குரிய நேரத்தில் இருக்கின்றது. ஷஹீது, ஸித்தீக் பதவிகள் நபியின் சிறப்பிற்கான சான்றாகும். ஷஹீது என்பவர் ஈமானை எந்த அளவிற்கு வலிமையாக்கிக் கொள்கின்றார் என்றால் அவர் ஒருவகையில் இறைவனை காண்கின்றார். ஸித்தீக் செயல் ரீதியில் உண்மையின் மீது நேசம் கொள்கின்றார். மேலும் பொய்யிலிருந்து விலகிக் கொள்கின்றார். நபியின் சிறப்பு என்னவென்றால் அவர் இறைநாட்டத்தின் கீழ் வந்து விடுகின்றார். இந்த சிறப்பு மற்ற மக்களுக்கு கிடைக்க முடியாது என்று சில மக்கள் கூறுகின்றனர். மேலும், வெறும் வெளிப்படையில் கலிமா கூறிக் கொள்ளுங்கள்; மேலும் தொழுகை நோன்பின் கட்டளையைப் பேணிக் கொள்ளுங்கள் அவ்வளவுதான்; இதை விட அதிகமாக (இறைக்) கட்டளைகளுக்கான கனிகளும் விளைவுகளும் வேறும் எதுவும் கிடையாது; மேலும் அதில் எந்த உண்மைத்துவமும் கிடையாது என்று மவ்லவிகளும், ஆலிம்களும் கூறுகின்றனர். இது (அவர்களின்) மாபெரும் தவறாகும். மேலும், ஈமானிய பலவீனம் ஆகும். அவர்கள் நபித்துவத்தின் வாதத்தையே புரியவில்லை.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 465, காதியான் பதிப்பு -2003)

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

வணங்கிக் கொண்டிருந்தோம் (என்று அவர்கள் கூறினர்). இங்கு அவர்களின் சொந்த வாதம் அவர்களின் இணை வைத்தலை ரத்து செய்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. அர்ஷின் அதிபதியான இறைவனை அடைய வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம் ஆகும். மேலும் அர்ஷின் இறைவனுக்கு நெருக்கமானவர்களுடன் அவர்கள் தொடர்பையும் உருவாக்கிக் கொண்டு விட்டார்கள் என்றால் பின்னர் அவர்கள் இறைவனுக்கு நெருக்கமானவர்களாக ஆகியிருக்க வேண்டும். ஆனால், அதற்கான எந்த அடையாளமும் அவர்களிடம் காணப்படவில்லை.

திருக்குர்ஆனிலிருந்து இறை நெருக்கத்திற்கான கீழ் கண்ட அடையாளங்கள் தெரிய வருகின்றன.

முதலாவது, துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் ஆகும். அல்லாஹ் கூறுகின்றான்:

وَ اِذَا سَاَلَكَ عِبَادِیْ عَنِّیْ فَاِنِّیْ قَرِیْبٌ ؕ اُجِیْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ (2: 187)

என்னுடைய அடியார் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நான் அவர்களுக்கு அருகிலேயே இருக்கின்றேன் என்று நீர் அவர்களிடம் கூறுவீராக. நான் (என்னை) அழைக்கின்றவரின் அழைப்பிற்கு பதில் அளிக்கின்றேன் என்பதே நான் அவர்களுக்கு அருகில் இருப்பதற்கான அடையாளம் ஆகும். இது எப்படிப்பட்ட அடையாளம் என்றால் இதனை இதன் சான்றை இணை வைப்பாளர் கூட நிராகரிக்க முடியாது. ஆனால், இந்த அடையாளம் எந்த இணை வைப்பாளரிடமும் காணப்படுவதில்லை. தமது துஆ ஒப்புக் கொள்ளப்படுகின்றது என்று வாதம் செய்யக் கூடிய ஒருவர் கூட இணை வைப்பாளர்களில் காணப்படுவதில்லை. எனக்கு இந்த சிலைகளின் மூலமாக இறைவன் கிடைத்து விட்டான் என்றும் அவை எனது துஆக்களை கேட்கின்றன மேலும் ஒப்புக் கொள்கின்றன என்றும் வாதம் செய்யக் கூடிய எந்த ஒரு நபரும் இன்று வரை பிறக்கவில்லை. அவரது துஆ ஒப்புக் கொள்ளப்பட்ட அடையாளத்தை உலகம் பார்த்ததும் இல்லை.

இரண்டாவது அளவுகோல், சூரா வாகிஆவில் கூறப்பட்டுள்ள இறை நெருக்கம் ஆகும்.

அங்கு இறை நெருக்கம் பெற்றவர்களைப் பற்றி கூறிவிட்டு அல்லாஹ் கூறுகின்றான்:

لَا یَسْمَعُوْنَ فِیْهَا لَغْوًا وَّلَا تَاْثِیْمًا ۝ اِلَّا قِیْلًا سَلٰمًا سَلٰمًا

பொருள்: நெருக்கத்தின் அந்தஸ்து எப்படிப்பட்டது என்றால் அதில், வீணான மற்றும் பாவத்திற்கான விஷயம் இருப்பதில்லை. மேலும், மக்கள் ஒருவர் மற்றவரின் தீங்கிலிருந்தும் பாதுகாப்பு பெற்று விடுகின்றனர். மேலும், ஒவ்வொரு நபரும் மற்ற நபரின் அமைதியை தேடுகின்றான். மேலும், அல்லாஹ்வின் புறமிருந்தும் அவருக்கு அமைதி கிடைக்கின்றது. இந்த அளவுகோலும் எப்படிப்பட்டதென்றால் எந்த இணை வைப்பாளரும் இதனை நிராகரிக்க முடியாது. அல்லாஹ்விற்கு அருகில் இருப்பவர் வீணான விஷயங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் தப்பித்து விடுவார். மேலும் இறைவனின் அடியாராக இருக்கும் நிலையில் அவர் அவனது மற்ற அடியார்களின் நன்மையில் ஈடுபட்டிருப்பார். குழப்பம் செய்ய மாட்டார். இந்த அடையாளமும் எந்த இணை வைப்பாளரிடமும் காணப்படுவதில்லை. முதல் விஷயம் என்பது வீணான விஷயத்திலிருந்து விலகியிருப்பது ஆகும். இணை வைப்பாளர்களிடம் இது எங்கே காணப்பட முடியும்? அவர்களோ இணை வைத்தலின் காரணமாக எள்ளி நகையாடக் கூடிய விஷயங்களை கூறுகின்றனர். எந்த நன்மையும், தீங்கும் விளைவிக்க முடியாத ஒன்றின் முன்னால் அவர் சிரம் பணிகின்றார். அதனை மகத்துவப்படுத்துகின்றார். எந்த அளவிற்கு என்றால் அறிவுடையவர் அவரது செயலைக் கண்டு ஆச்சரியத்தில் உறைந்து விடுகின்றார். இந்தியாவில் பசுவிற்கு வழங்கப்பட்டிருக்கும் புனிதத்துவத்தை எந்த அறிவுடையவர் ஆகுமானதாக ஏற்றுக் கொள்ள முடியும்? பசுவை வணங்குபவர்கள் அதன் பாலிலிருந்து பசுவின் கன்றை விலக்கி விடுகின்றனர். தாங்களோ தானியங்களை உண்கின்றனர். அதற்கு புல்லை கொடுக்கின்றனர். அதனை கட்டி வைக்கின்றனர். அதன் இணையின் மீது சுமையை ஏற்றுகின்றனர். சவாரி செய்ய அதனை பயன்படுத்துகின்றனர். அடித்து உதைக்கின்றனர். மேலும், அதனை வணங்கவும் செய்கின்றனர்.

கிறித்தவர்கள் ஒரு பலவீனமான மனிதனை இறைவனாக்கிக் கொண்டார்கள் என்று இந்துக்கள் கிறித்தவர்களைப் பார்த்து ஏளனம் செய்கின்றனர். இந்துக்கள் ஒரு பலவீனமான விலங்கை இறைவனாகக் கருதுகின்றனர் என்று கிறித்தவர்கள் இந்துக்களை பார்த்து எள்ளி நகைக்கின்றனர். இந்த வீணான விஷயங்களைப் பார்த்து ஓர் ஏகத்துவ வாதி لَاحَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ என்று கூறுகின்றார்.

இரண்டாவது அடையாளம் பாவத்திலிருந்து தப்பிப்பது ஆகும். நிச்சயமாக இணை வைப்பாளர்களில் சில நல்லவர்கள் இருக்கின்றனர். ஆனால், அவர்களின் நன்மை இணை வைத்தலின் காரணமாக இல்லை. மாறாக, இணை வைத்தலின் நிலையிலும் இருக்கின்றது. அதுபோன்ற மக்களின் இயல்பு நல்லதாக இருக்கின்றது. எனவே இணை வைத்தல் அவர்களிடத்தில் வேரூன்றுவது இல்லை. உதாரணமாக, பசுவையே எடுத்துக் கொள்ளுங்கள். எவர்கள் பசுவை வணங்குகின்றார்களோ அவர்கள் பசுவிற்கு பலவகையில் துன்பமும் இழைக்கின்றனர். மேலும் அதனை நிர்பந்தப்படுத்துகின்றனர். ஏனெனில், பசுவை இறைவன் மனிதனின் பயனிற்காக படைத்துள்ளான். அதனிடமிருந்து வேலை வாங்குவதை தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. அதனுடைய விளைவு என்னவாக இருக்கின்றதென்றால் அவர்கள் பசுவிடமிருந்து வேலையும் வாங்கிக் கொள்கின்றனர். மேலும் அத்துடன் உள்ளத்தில் பாவத்திற்கான உணர்வும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. மேலும் அவர்களின் உள்ளம் அசுத்தமாகிவிடுகின்றது. பின்னர் பாருங்கள்! இணை வைப்பாளர்கள் தசரா போன்ற பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். ஆனால், ராவணன் பிராமணராக இருந்தார்; ராம் ஷத்ரீயராக இருந்தார் என்ற எண்ணத்தால் தசரா கொண்டாடிவிட்டு பிராமணர்களின் இழிவை அகற்றுவதற்காக ஒருநாளை தவ்பாவிற்காக வைத்துக் கொள்கின்றனர். கிறித்தவர்களின் நிலையும் இவ்வாறே உள்ளது. மஸீஹை ஒருபக்கம் இறைவனாக்கிக் கொள்கின்றனர். மற்றொரு பக்கம் தங்களது பாவங்களை அவர் மீது சுமத்திவிடுகின்றனர். மேலும், இணை வைத்தலுக்கான கொள்கை அவர்களுக்கு அனைத்து தீமைக்கான வழியையும் திறந்து விட்டு விடுகின்றது. ஏனெனில், (நவூதுபில்லாஹ்) தேவனாகிய இயேசு நமது பாவங்களை சுமந்து கொள்கின்றார் என்று அவர்கள் கருதுகின்றனர். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 340, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * *

**வல்லமை மிக்க ஏக இறைவனின் இருப்பை ஒப்புக் கொள்ளாத வரை உண்மையான அமைதி நிலை பெற முடியாது**

**அமைதி நல்கக் கூடியவன் அல்லாஹ் ஆவான் என்ற கொள்கையை இஸ்லாம் மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மூலமாக முன்வைத்துள்ளது**

**ஐரோப்பாவில் வசிப்பவர்களே! நீங்களும் பாதுகாப்பாக இல்லை. ஆசியாவில் வசிப்பவர்களே! நீங்களும் பாதுகாப்பாக இல்லை. தீவுகளில் வசிப்பவர்களே! எந்த செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவி செய்ய மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதையும் காண்கின்றேன். வசிப்பிடங்கள் வெறிச்சோடிக் கிடப்பதையும் காண்கின்றேன்**

**- ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)**

**மக்களிடத்தில் உண்மையான சகோதரத்துவம் உருவாகாதவரை (உலகில்) அமைதி நிலைபெற முடியாது**

**ஏக இறைவனை ஒப்புக் கொள்ளாத வரை உண்மையான சகோதரத்துவம் உருவாக முடியாது**

**உலகிற்கு கூறுங்கள். இன்று உலகின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு இது மட்டுமே தீர்வாகும்**

**எனவே வாருங்கள்! அமைதி மற்றும் சமாதானத்திற்கான போதனை நல்கக்கூடிய அந்த மகத்துவ மிக்க நபருடன் இணைந்து இம்மை மற்றும் மறுமையின் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை செய்து கொள்ளுங்கள் என்று உலகிற்கு கூறுங்கள்**

**தமது நடத்தையை இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொண்டு உலகிற்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழ ஜமாஅத் உறுப்பினர்களுக்கு அறிவுரை**

# ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய நிறைவுரை-ஆகஸ்ட் 21, 2022

## ஸய்யிதுனா ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஒப்புதலுடன் ஹுஸுர் அவர்களின் இந்த (ஜெர்மன் ஜல்ஸாவின்) நிறைவுரை கேள்வி-பதில் வடிவில்

**கேள்வி** : ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது சொற்பொழிவின் துவக்கத்தில் கோவிட் தொற்று நோய்க்குப் பிறகு எந்த பிரச்சனையைக் குறித்து குறிப்பிட்டார்கள்? எது உலகை அபாயகரமான இடத்தில் நிறுத்தி விட்டது?

**பதில்** : ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: கோவிட் தொற்று நோயானது முதலில் உலகை துன்புறுத்தியது. மேலும், தற்போது அந்த கோவிட் பிரச்சனை முடியவில்லை. அதற்குள் தற்போது உலகில் போர்களுக்கான நிலவரங்கள் உலகை ஒரு மிகவும் அபாயகரமான இடத்தில் கொண்டு வந்து நிறுத்தி விட்டது. உலகில் எந்தவொரு பகுதியும் அந்த எதிர்பார்க்கப்படும் அழிவிலிருந்து பாதுகாப்பானதாக தென்படவில்லை.

**கேள்வி** : ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஐரோப்பா மற்றும் ஆசியாவின் நிலப்பரப்புகள் தொடர்பாக என்ன முன்னறிவிப்பு செய்துள்ளார்கள்?

**பதில்** : ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஐரோப்பா மற்றும் ஆசியா தொடர்பாக இவ்வாறு முன்னறிவிப்பு செய்துள்ளார்கள்:

ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. மேலும், ஆசியாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. மேலும், தீவுகளில் வசிப்பவர்களே! எந்த செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவி செய்ய மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதை காண்கின்றேன். மேலும், வசிப்பிடங்கள் பாழடைந்து கிடப்பதைக் காண்கின்றேன்.

**கேள்வி:** உண்மையான அமைதி எப்போது நிலை பெற முடியும்?

**பதில்:** ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உயர்வான ஏக இறைவனின் இருப்பை ஒப்புக் கொள்ளாத வரை உண்மையான அமைதி நிலை பெற முடியாது. மேலும், கூறினார்கள்: மக்களுக்கு மத்தியில் உண்மையான சகோதரத்துவம் உருவாகாத வரை உண்மையான அமைதி நிலை பெற முடியாது. மேலும், ஏக இறைவனை ஒப்புக் கொள்ளாத வரை உண்மையான சகோதரத்துவம் உருவாக முடியாது.

**கேள்வி:** ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உண்மையான அமைதியை நிலை நாட்டுவது குறித்து என்ன கூறினார்கள்?

**பதில்:** ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: சாதி, குடும்பம், இனம், சமுதாயம் மற்றும் தேசம் ஆகியவற்றின் முன்னுரிமைகளுக்கு அப்பாற்பட்டு அமைதியை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும், எனக்கு மேல் ஓர் இறைவன் இருக்கின்றான். அவன் எனக்கு மட்டுமே அமைதியை விரும்புவதில்லை ; மாறாக முழு உலகிற்காகவும் அமைதியை விரும்புகின்றான் என்ற விஷயத்தை மனிதன் புரிந்து கொள்ளும்போதும் தான் இந்த நிலை உருவாக முடியும்.

**கேள்வி:** அல்லாஹ் மட்டுமே அமைதி நல்கக் கூடியவன் என்ற கொள்கையை யார் முன்வைக்கின்றார்?

**பதில்:** ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அமைதி நல்கக் கூடியவன் ஆவான் என்ற இந்தக் கொள்கையை இஸ்லாம் மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக முன்வைத்துள்ளது.

**கேள்வி:** நாம் எப்போது பேறிழந்தவர்கள் என்று கூறப்படுவோம்?

**பதில்:** ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இறைத் தூதுர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களையும், திருக்குர்ஆனையும் அல்லாஹ் அனுப்பி மனித குலத்தின் மீது பெரும் கருணை செய்துள்ளான். மனிதன் இதிலிருந்து பயன் பெறவில்லையென்றால், மேலும், அழிவிற்குள்ளாக்குகின்ற சுயநலமான பயன்களின் கைதியாகவே மனிதன் இருந்தால் பின்னர் அதை விட பெரும் துர்பாக்கியம் வேறு என்ன இருக்க முடியும்?

**கேள்வி:** இன்றைய நாட்களில் உலகின் நிலைமைகளிலிருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்ள முடியும்?

**பதில்:** ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இதுபோன்ற சூழலில் நம்பிக்கைக்கான ஏதாவது ஒளிக் கதிர் உள்ளதென்றால், அமைதிக்கான உத்திரவாதம் இருக்கின்றதென்றால் அது ஒன்றே ஒன்றுதான். அதாவது எவரை அல்லாஹ் பாதுகாப்பு மற்றும் அமைதிக்கான போதனையுடன் உலகில் அனுப்பியுள்ளானோ எவர் அமைதியின் இளவரசராக உள்ளாரோ எவர் அல்லாஹ்விற்கு எல்லா மனிதர்களையும் விட மிகவும் அன்பிற்குரியவராக உள்ளாரோ எவர் மீது அல்லாஹ்வின் இறுதியான மற்றும் முழுமையான ஷரீஅத் இறங்கியுள்ளதோ எவர் தனது இறைவனுடனான தொடர்பின் காரணமாகவும், தம் மீது இறங்கியுள்ள போதனையை உலகில் பரப்புவதற்கும் உலகை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கும் கவலையும் அதற்காக கடுமையான வேதனையையும் உணர்ந்ததன் காரணமாக தமது வாழ்க்கையை மாய்த்துக் கொண்டாரோ (அவர் பக்கம் வர வேண்டும்). மேலும் அவர் இந்த அளவிற்கு தமது நிலைமையை ஆக்கிக் கொண்டார். மேலும் வேதனையால் துடித்தவாறும் அழுதவாறும் அல்லாஹ்விடம் அவர் துஆ செய்தார். அதனால் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், لَعَلَّكَ بَاخِعٌ نَّفۡسَكَ اَلَّا يَكُوۡنُوۡا مُؤۡمِنِيۡنَ என்று கூறினான். பொருள்: அவர்கள் நம்பிக்கை கொள்வதில்லை என்பதற்காக நீர் உம்மையே மாய்த்துக் கொள்வீரா? (41:4)

**கேள்வி:** போர்கள் மூளும் நிலையில் அழிவு எவ்வாறு ஏற்படும்?

**பதில்:** தற்போது சில இடங்களில் வல்லுநர்கள் இவ்வாறும் கூறி வருகின்றனர். அதாவது போர்கள் மூளும் சூழலில் ஏற்படவிருக்கும் அழிவு எவ்வளவு அபாயகரமானதாக இருக்கும் என்றால், ஓர் அனுமானத்தின் அடிப்படையில் போர் மற்றும் அதன் பிறகான இரண்டு ஆண்டுகளில் அணு ஆயுதங்களின் பயன்பாட்டின் காரணமாக உலகின் 66 சதவிகித மக்கள்தொகை உலகிலிருந்து அழிந்துவிடும். மேலும் எப்படிப்பட்ட அழிவு ஏற்படும் என்றால் அதனை எவராலும் கற்பனைக் கூட செய்து பார்க்க முடியாது. ஒரு சாதாரண மனிதனால் அதனை சிந்தித்து கூட பார்க்க முடியாது.

**கேள்வி:** ஐரோப்பா மற்றும் மேற்கத்திய நாடுகளின் மக்கள் எந்த

எண்ணத்தில் அமர்ந்திருந்தார்கள்?

**பதில்:** ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: போர்களுக்கான சூழல், குழப்பத்திற்கான சூழல் மேலும் பகுதிகள் மற்றும் நாடுகளின் அழிவிற்கான சூழல்கள் எங்கு உருவாகிக் கொண்டிருக்கின்றனவோ அவை நம்மிடம் இருந்து ஆயிரக்கணக்கான மைல் தொலைவில் உள்ளது. எனவே நாம் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்ற எண்ணத்தில் முன்னர் ஐரோப்பா அல்லது மேற்கத்திய நாடுகள் நாடுகள் அமர்ந்திருந்தன.

**கேள்வி:** முன்னேற்றம் அடைந்த நாடுகள் போர்களை ஊக்குவிப்பதற்காக என்ன செய்கின்றன?

**பதில்:** ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

நமது ஆயுதங்கள் விற்பனையாகிக் கொண்டிருக்கட்டும்; இவர்கள் மடிந்தால் மடியட்டும்;அதனால் நமக்கு என்ன பாதிப்பு? என்று முன்னேற்றமடைந்த நாடுகள் அந்த நாடுகளுக்கு ஆயுதங்களை வழங்கிக் கொண்டிருந்தனர்.

**கேள்வி:** தங்களது நலனுக்காக ஆயுதங்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற முன்னேற்றம் அடைந்த நாடுகள் எந்த விஷயத்தை மறந்து விட்டனர்?

**பதில்:** ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இந்த நிலைமைகள் அவர்கள் மீதும் வரக்கூடும் என்பதை அவர்கள் மறந்துவிட்டனர். மேலும் (தங்களின்) முன்னேற்றத்தின் பெருமையில் அவர்களின் அறிவு மழுங்கிவிட்டது. மேலும் கண்கள் குருடாகிவிட்டன. பின்னர், தற்போது எதனைக் குறித்த அபாயம் இருந்ததோ அதுவே நிகழ்ந்துவிட்டது. மேலும் ஐரோப்பாவிலும் போருக்கான சூழல்கள் உருவாகி விட்டன என்பதை முழு உலகமும் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

**கேள்வி:** நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது உண்மையான அன்பு இருக்கின்றதென்றால் பின்னர் நாம் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மீது உண்மையான நேசம் உள்ளதென்றால் பின்னர் நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளை மேற்கொள்ளுங்கள். மேலும் உலகில் (அதனை) பரப்புங்கள்.

இன்று உலகில் அமைதி மற்றும் சமாதானத்திற்கான இந்த ஒரே தீர்வுதான் உள்ளது என்று உலகிற்கு கூறுங்கள். எனவே வாருங்கள் ! மேலும் அமைதி மற்றும் சமாதானத்திற்கான போதனைகளை நல்கக்கூடிய அந்த மகத்துவ மிக்க இருப்புடன் இணைந்து இம்மை மற்றும் மறுமையில் உங்களது பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை செய்து கொள்ளுங்கள் என்றும் உலகிற்கு கூற வேண்டும்.

**கேள்வி:** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவனின் படைப்பினங்களைக் குறித்து எந்த அளவிற்கு வேதனை இருந்தது?

**பதில்:** ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு இறைவனின் படைப்பினங்களைக் குறித்து எந்த அளவிற்கு வேதனை இருந்தது? மேலும் எந்த அளவிற்கு துடிப்பு இருந்தது? இது குறித்து திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

لَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ اَلَّا يَكُوْنُوْا مُؤْمِنِيْنَ

பொருள்: அவர்கள் நம்பிக்கை கொள்வதில்லை என்பதற்காக நீர் உம்மையே மாய்த்துக் கொள்வீரா? (41:4)

**கேள்வி:** உக்ரைனின் காரணமாக என்ன நிலைமைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன?

**பதில்:** ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

உக்ரைனின் காரணமாக ரஷ்யா மற்றும் நேட்டோ நாடுகள் எதிரெதிராக நிற்கின்றன. இறுதியில் யார் வெற்றி பெற இருக்கின்றார்? அல்லது இரு தரப்பிலும் எவ்வளவு பாதிப்பு ஏற்படும்? என்பதை இறைவனே நன்கு அறிவான். ஆனால், இதன் விளைவுகள் மிகவும் அபாயகரமானதாக இருக்கும் என்பது உறுதியான விஷயமாகும். இப்போதும் கூட அறிவுடன் செயல்படவில்லையென்றால் பின்னர் ஓர் அபாயகரமான அழிவு அதன் முடிவாக இருக்கும்.

**கேள்வி:** போருக்குப் பிறகான நிலைமைகளை சில வல்லுநர்கள் எவ்வாறு விவரிக்கின்றனர்?

**பதில்:** ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

தற்போது சில இடங்களில் வல்லுநர்கள் இவ்வாறும் கூறிவருகின்றனர். அதாவது போர்கள் மூளும் சூழலில் ஏற்படவிருக்கும் அழிவு எவ்வளவு அபாயகரமானதாக இருக்கும் என்றால், ஓர் அனுமானத்தின் அடிப்படையில் போர் மற்றும் அதன் பிறகான இரண்டு ஆண்டுகளில் அணு ஆயுதங்களின் பயன்பாட்டின் காரணமாக உலகின் 66 சதவிகித மக்கள்தொகை உலகிலிருந்து அழிந்துவிடும். மேலும் எப்படிப்பட்ட அழிவு ஏற்படும் என்றால் அதனை எவராலும் கற்பனைக் கூட செய்து பார்க்க முடியாது. ஒரு சாதாரண மனிதனால் அதனை சிந்தித்து கூட பார்க்க முடியாது.

**கேள்வி:** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்வது ஏன் அவசியம் ஆகும்?

**பதில்:** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தற்போது வானத்தின் கீழ் ஒரேயொரு நபியும், ஒரேயொரு வேதமும் மட்டுமே உள்ளது. அதாவது அனைத்து நபிமார்களிலும் உயர்ந்தவரும், சிறந்தவரும் மேலும் அனைத்து தூதர்களிலும் முழுமையானவரும் நிறைவானவரும் மேலும் காத்தமுல் அன்பியா மற்றும் மக்களில் மிகச் சிறந்தவரும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். அன்னாரைப் பின்பற்றுவதனால் இறைவன் கிடைக்கின்றான். இருள்களின் திரைகள் அகற்றப்படுகின்றன. மேலும், உண்மையான மற்றும் முழுமையான வழிகாட்டல்கள் மற்றும் தாக்கங்களை உள்ளடக்கியதாக திருக்குர்ஆன் இருக்கின்றது. அதன் மூலமாக உண்மையான அறிவுகளும், இறைஞானமும் கிடைக்கின்றன. மேலும் மனித (பலவீனங்கள் எனும்) குறைபாடுகளிலிருந்து உள்ளம் தூய்மையடைகின்றது. மேலும் மனிதன் அறிவீனம், கவனமின்மை மற்றும் சந்தேகங்களின் திரைகளிலிருந்து இரட்சிப்பு பெற்று அனுபவ அறிவு என்ற அந்தஸ்தை அடைந்து விடுகின்றான்.

**கேள்வி:** நாம் எப்போது அறிவு மற்றும் இறைஞானத்திற்கான சரியான புரிதலை பெற முடியும்?

**பதில்:** ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

உண்மையான ஏகத்துவ வாதியே உண்மையான அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான கொடியை ஏந்தி நிற்க முடியும். முஸ்லிம்கள் இந்தக் கருத்தை புரிந்து கொண்டால் மேலும் அதற்கேற்ப தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் பின்னர் உலகில் உண்மையான அமைதியை விரும்பக்கூடியவர்களாக அவர்களே இருப்பார்கள். ஆனால், பின்னர் விஷயம் மீண்டும் இங்கு வந்துதான் நிற்கின்றது. அதாவது, அதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பருடன் இணைவது அவசியமாகும். அப்போதுதான் அறிவு மற்றும் இறைஞானத்திற்கான சரியான புரிதலை பெறவும் முடியும்.

**கேள்வி:** உண்மையான அமைதியை நிலைநாட்டுவதற்கு எது அவசியம் ஆகும்?

**பதில்:** ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உண்மையான அமைதியை உலகில் உருவாக்குவதற்காக ஏக இறைவனின் மீதான தனது ஈமானை உறுதிபடுத்துவதும், வேறு எந்த ஒரு நேசமும் உள்ளத்தில் இடம் பெற முடியாத அளவிற்கு ஏக இறைவனின் மீதான நேசத்தை தங்களது உள்ளங்களில் உறுதியாக்கிக் கொள்வதும் இன்று ஒவ்வொரு அஹ்மதியின் பணியாகும். மேலும், அவனது கட்டளைகளின்படி அமல் செய்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய போதனை அதாவது திருக்குர்ஆனை தங்களது வாழ்வின் அங்கமாக அவர்கள் ஆக்கிக் கொள்ள வேண்டும். நமது தரம் இந்த அந்தஸ்தை அடைந்துவிட வேண்டும். அதாவது திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒவ்வொரு வழிகாட்டலும் நமது சொல் மற்றும் செயலின் அங்கமாக ஆகிவிட வேண்டும். அப்போதுதான் நாம் உலகிற்கு இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியும். அந்நிலையில் நாம் அமைதிக்கான வழிமுறைகளை போதனையின் வடிவில் மட்டுமே அவர்களுக்கு முன்வைக்க மாட்டோம். மாறாக, நமது செயலாலும் கற்றுக் கொடுப்போம். இதுவே உலகில் உண்மையான அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிமுறையாகும்.

**கேள்வி:** ஜல்ஸாவில் கலந்து கொண்டிருந்த ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**பதில்:** ஜல்ஸாவில் கலந்து

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 13-20 July 2023 Issue No. 28 & 29

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 19,482 ஆகும். அதில் பெண்களின் எண்ணிக்கை 9,482 ஆகும். ஆண்களின் எண்ணிக்கை 10,300 ஆகும். இது மட்டுமின்றி, மற்ற வழிமுறைகளின் மூலமாகவும் மக்கள் ஜல்ஸா ஸாலானாவின் நிகழ்ச்சிகளை பார்த்து வருகின்றனர் அல்லது கேட்டு வருகின்றனர். அவர்களின் எண்ணிக்கையும் 40,000-ஐயும் விட அதிகம் ஆகும்.

**கேள்வி:** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுதல் மனிதனை எந்த அந்தஸ்தை அடையச் செய்கின்றது?

**பதில்:** ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுதல் என்பது மனிதனை எந்த அந்தஸ்திற்கு கொண்டு சென்று விடுகின்றது என்றால், அந்த அந்தஸ்தை அடைந்து அந்த நபர் அல்லாஹ்வுடன் உண்மையான நேசம் கொள்ளக்கூடியவராக ஆகிவிடுகின்றார். மேலும் இந்த உண்மையான நேசம் பின்னர் மனிதனை தனது ஒவ்வொரு கூற்றாலும், செயலாலும் இறை திருப்தியை பெறக் கூடியவராக ஆக்கிவிடுகின்றது.

**கேள்வி:** ஒருவரின் மீது உண்மையான அன்பு இருக்கும்போது பின்னர் என்ன நிலை ஏற்படுகின்றது?

**பதில்:** ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் மீது அன்பு கொள்ளப்படும்போது பின்னர் அவரது ஒவ்வொரு சொல்லின்படியும், செயலின்படியும் அமல் செய்வதற்கு மனிதன் முயற்சி செய்கின்றான் ; அவரது ஒவ்வொரு கூற்றையும் கேட்பதற்கும், அதனை ஒப்புக் கொள்வதற்கும் மனிதன் முயற்சி செய்கின்றான்.

**கேள்வி:** சொற்பொழிவின் இறுதியில் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எந்தெந்த துஆக்களின் பக்கம் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு கவனமூட்டியுள்ளார்கள்?

**பதில்:** ஹுஸுர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

ஜல்ஸாவில் கலந்து கொள்ளக்கூடியவர்களை ஜல்ஸாவின் அருட்களை பெறக்கூடியவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக.மேலும் எல்லாரையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசுகளாக ஆக்குவானாக. மேலும், நாம் நமது ஜல்ஸாக்களை மீண்டும் பரந்துபட்ட அளவிலும், மீண்டும் பழைய பொலிவுடனும், எல்லா வகையான கவலைகளிலிருந்து விடுபட்டவாறு ஜல்ஸாவை நடத்துவதற்கு ஏதுவாக அல்லாஹ் உலகின் நிலைமைகளில் விரைவாக எல்லா புறமிருந்தும் அமைதியையும் பாதுகாப்பையும் உருவாக்குவானாக. மேலும், நமது ஆன்மீக மற்றும் அறிவார்ந்த தாகத்தை தணித்துக் கொள்வதற்கான வழிமுறையாக அல்லாஹ் ஜல்ஸாக்களை ஆக்குவானாக. மேலும், உண்மையாகவே நமது வாழ்க்கையை இஸ்லாத்தின் போதனைக்கேற்ப ஆக்கிக் கொள்வதற்கான வழிமுறையாக ஆக்குவானாக.அல்லாஹ்வின் அன்பையும் அவனது நேசத்தையும் ஈர்த்துக் கொள்ளக்கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக. இவ்வாறு அனைவரும் துஆ செய்யுங்கள்.

**கேள்வி:** நமக்கு எப்போது அல்லாஹ்வின் திருப்தி கிடைக்கும்?

**பதில்:** ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இந்த போதனையை கருத்தில் கொண்டவாறு எப்போதும் இந்த சிந்தனை இருக்க வேண்டும். அதாவது, ஒருவேளை நான் எனக்கு மட்டும் அல்லது எனது சமுதாயத்திற்கு மட்டும் அல்லது எனது நாட்டிற்கு மட்டும் அமைதி நிலை பெற வேண்டும் என்று விருப்பம் கொண்டால் பின்னர் அந்நிலையில் எனக்கு இறைவனின் உதவியும், அவனது ஆதரவும், அவனது திருப்தியும் ஒருபோதும் கிடைக்க முடியாது என்ற எண்ணம் இருக்க வேண்டும். அல்லாஹ்விற்காகவே எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற கொள்கையில் மனிதன் நிலைபெற்றுவிடும்போதுதான் உண்மையான அமைதி நிலை பெற முடியும். இல்லையென்றால் முடியாது.

**கேள்வி:** உலகில் தற்போது எவ்வளவு போர்கள் நடைபெற்று வருகின்றனவோ அவற்றிற்கான காரணம் என்ன?

**பதில்:** ஹுஸுர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: உலகில் தற்போது எவ்வளவு போர்கள் மற்றும் குழப்பங்கள் நிகழ்ந்து வருகின்றனவோ அவை அனைத்திற்கும் இதுவே காரணம் ஆகும். அதாவது மனிதனின் எண்ணங்கள் தூய்மையாக இல்லை.

**கேள்வி:** நாம் எவற்றின் மூலம் அல்லாஹ்வின் திருப்தியை பெற முடியும்?

**பதில்:** ஹுஸுர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய வேதத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:ற

قَدْ جَآءَكُمْ مِّنَ اللّٰهِ نُوْرٌ وَّ كِتٰبٌ مُّبِيْنٌ
يَّهْدِيْ بِهِ اللّٰهُ مَنِ اتَّبَعَ رِضْوَانَهٗ سُبُلَ السَّلٰمِ

(அல்மாயிதா: 16- 17) நிச்சயமாக உங்களிடத்தில் அல்லாஹ்விடமிருந்து ஓர் ஒளியும், ஓர் ஒளிமிக்க வேதமும் வந்துவிட்டது. எவர் அவனது திருப்தியை பின்பற்றி நடக்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் அதன் மூலமாக அமைதியின் வழிகளின் பக்கம் வழிகாட்டுகின்றான்.

**கேள்வி:** நாம் எப்போது நமது இம்மை மற்றும் மறுமையை சீர்படுத்திக் கொள்ள முடியும்?

**பதில்:** ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நாம் இம்மையையும், மறுமையையும் சீர்படுத்த வேண்டும் என்றால், மேலும் அமைதியுடனும், நிம்மதியுடனும் வாழ வேண்டும் என்றால், பின்னர் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய அல்லாஹ்வின் அந்த வேதத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அந்த வேதம் கூறுகின்றது:

يَّهْدِيْ بِهِ اللّٰهُ مَنِ اتَّبَعَ رِضْوَانَهٗ سُبُلَ السَّلٰمِ

பொருள்: இந்த ஒளிமயமான வேதத்தின் வழிகாட்டல்களை எப்போதும் உங்கள் கருத்தில் கொள்ளுங்கள். இந்த ஒளிமயமான வேதத்தின் வழிகாட்டலை ஓதுங்கள். மேலும் அதனை உங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் அமைதியின் வழியில் செல்லக்கூடியவர்களாக நீங்கள் திகழ்வீர்கள்.

தமிழாக்கம் :
மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad